# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

..ள்ளுவர் ஆண்டு 2037 சித்திரை 18 திங்கட்கிழமை (01.05.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :155


திட்டமிட்டு....



தாக்கி....



கைப்பற்றியவை.



# ..வலிகந்தையில் கருணா குழு முகாம்

# ..டுதலைப் புலிகளால் தாக்கி அழிப்பு!

## ..ட்டுப்படையினர் 18 பேர் பலி! .. பேர் காயம்; ஐவர் சிக்கினர்!!

கொழும்பு,மே1

..டக்களப்பு - பொலனறுவை மாவட்டங்களின் எல்லைப் புறத்தில் அரச கட்டுப் ..ல் உள்ள வெலிகந்தைப் பிரதேசத்தில் அமைந்திருந்த கருணா குழுவினரின் முகாமை ..லைப் புலிகளின் கொமாண்டோ அணி ஒன்று ஊடுருவி, நேற்று அதிகாலை அதைத் ..ழித்தது. இந்தத் தாக்குதலில் ஒட்டுப்படையினர் பதினெட்டுப்பேர் வரை பலி ..கள் என்றும், பத்துப்பேர் படுகாயமுற்றனர் என்றும் புலிகள் தரப்பில் அறிவிக் ..டது. மேலும் ஐந்து ஒட்டுப்படையினர் புலிகளிடம் சிக்கினர் என்றும் ஒரு தகவல் ..வித்தது. அதேவேளை, கருணா குழுவினர் சிலர் காணாமற்போயிருக்கின்றனர் என் ..றப்பட்டது.

..லிகந்தையிலிருந்து கிழக்கே சுமார் ..ல் தொலைவில் உள்ள காசன்குளம் ..திருந்த ஒட்டுப்படை முகாமே தாக்கி ..ப்பட்டிருக்கின்றது. இந்த முகாமோடு தொடர்புபட்டிருந்த தீவுச்சேனை முகாம், காக்காடு முகாம் ஆகியனவும் அழிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுப்படைகளின் முக்கிய ஒன்றுகூடல் ஒன்று நேற்றுக் காலை இந்த முகாமில் நடக்க விருந்ததாகவும் - இந்த ஒன்றுகூடலில் கலந்து கொள்வதற்கென கருணாகுழுவினர், ஈ.என்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அல்லைப்பிட்டியில் கிளைமோர் தாக்குதல்!

தீவகத்தில் அல்லைப்பிட்டிச் சந்தி அருகே நேற்று மாலை 6.40 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதல் ஒன்றில் இரண்டு கடற்படையினர் படுகாயமடைந்திருக்கின்றனர்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மண்டைதீவு கடற்படை முகாமிலிருந்து இரண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேதினப் பேரணி குடாநாட்டில் இம்முறை இல்லை

மேதினமான இன்று பேரணிகள் எதுவும் இம்முறை குடாநாட்டில் இடம்பெற மாட்டாது.

தமிழ் மக்கள் மீது அரச படைகள் மேற்கொண்டு வரும் இன அழிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து மேதினத்தைப் புறக்கணிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே இம்முறை குடாநாட்டில் பேரணிகள் எதுவும் இடம்பெறவில்லை.

இதேவேளை, கிளிநொச்சியில் இன்று மேதினப் புறக்கணிப்புப் பேரணியும் கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (ஒ-13)

## கல்விச்சுடரில்

**இன்று :** கணக்கீடு II வினாத்தாள், கணக்கீடு II விடைக்குறிப்புகள், வணிகக் கல்வி II விடைக் குறிப்புகள் என்பன வெளிவரும்

**நாளை :** அளவையியலும் விஞ்ஞானமுறையும் I,II, வினாத்தாள்கள், தமிழ் II விடைக்குறிப்புகள் என்பன வெளிவரும்.

## ..த்தப்பட்ட புனர்வாழ்வுக் கழக ஊழியர்களின் ..ரண்டு வாகனங்கள் கருணா குழு முகாமில்!

கொழும்பு,மே1

..லிகந்தை காண்குளப் பகுதியில் .. குழுவினரின் முகாம் மீது நேற்று ..ல அதிரடித்தாக்குதல் நடத்திய விடு.. புலிகள், அந்த முகாமின் வளாகத்தினுள்ளே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர் என்று புலிகளின் வட்டாரங்கள் கூறுகின்றன.

கடந்த ஜனவரி 30ஆம், 31ஆம் திகதிகளில் வெலிகந்தைப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் பயணம் செய்த வாகனங்களாக அவை இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## ..லிகள் மீட்ட ஆயுதங்கள்

கொழும்பு,மே1

..ணா அணியினரின் முகாம் மீது நேற்று ..ல நடத்தப்பட்ட தாக்குதலின்போது .. முகாமிலிருந்து ஆயுதங்கள் பல..ம் தாங்கள் கைப்பற்றினார்கள் ..லிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ..று புலிகளால் கைப்பற்றப்பட்டன என்று கூறப்படும் ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

பி.கே. எல்.எம்.ஜி - 02, 81 - எம்.எம். மோட்டார் - 01, ஏ.கே. எல்.எம்.ஜி- 02, ரி - 56 - 2 ரகத் துப்பாக்கிகள் - 16, பிஸ்டல்கள் - 03, தொலைத்தொடர்புக் கருவிகள் - 04, ஆர்.பி.ஜி.- 01, கைக்குண்டு - 01. (க)

## பாதுகாப்புக் கெடுபிடியின் மத்தியில் நகருக்குள் ஒருவர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம், மே1

பலத்த பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் யாழ். நகரப் பகுதியின் மையத்தில் - அதன் இதயப் பகுதியில் - நேற்றுப் பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார். தாக்குதல் நடத்தியவர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போதும் தமது மோட்டார் சைக்கிளையும் கைவிட்டு அவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நகரின் மையத்தில் தனியார் பஸ் நிலையப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ..க்குப் போராளிகள் வன்னிக்கு ..தனரெனப் புலிகள் அறிவிப்பு

கிளிநொச்சி,மே1

.. கிழக்கு மாகாணப் போராளிகள் நேற்றிரவு வன்னி வந்தடைந்தனர் என்று தமி..லைப் புலிகள் அறிவித்துள்ளனர். இது தொடர்பாக நேற்றுப் பின்னிரவு விடுதலைப் ..விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

..மாலை.. ..ளிக்கு எமது கிழக்கு மாகாணப் போராளிகளை ஏற்றி வருவதற்காக ..தீவில் .. ..ருகோணமலை நோக்கிப் புறப்பட்ட கடற்புலிகளின் படகுகளை ..லங்.. கடற்.. ..னர் வழிமறித்துத் தாக்குதல் நடத்தினர். அப்போது கொக்கிளாய், ..க்குத்தொடுவாய் ஆகிய முகாம்களில் இருந்தும்

(14..ம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையின் முன்னணிப் பெறுபேறுகளில் சில

யாழ்ப்பாணம்,மே1

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் இடம் பெற்ற ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

அவற்றில் வடபகுதியில் உள்ள சில பாடசாலைகளில் 10ஏ சித்திபெற்ற மாணவர்களின் பெயர்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பாடசாலை ரீதியாக மாணவர்களின் பெயர்கள் வருமாறு:-

**வேம்படி மகளிர் கல்லூரி**

கேசினி முத்துக்குமாரசாமி, கிருத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ். பஸ் நிலைய மினிபஸ் தரிப்பிடத்தில் நேற்று முற்பகல் சுட்டுக்கொல்லப்பட்ட ஜோசப் பிரகாஸ் என்பவரின் சடலத்தையும் யாழ். மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொள்வதையும் கொலையாளிகள் கைவிட்டுச் சென்ற மோட்டார் சைக்கிளையும் படங்களில் காணலாம். (படங்கள் : நேசன்)

## ஊரெழுவில் நேற்று கிரனேட் வீச்சு!

ஊரெழுவில் பலாலி வீதிக்கு அ... யில் நின்றிருந்த இராணுவத்தினர் மீ... முற்பகல் 10.30 மணியளவில் ... வீச்சு இடம்பெற்றது. இதில் சிப்பாய் ... காயமடைந்தார் எனக் கூறப்பட்...

இதையடுத்து ஊரெழு பொ... பகுதியை சுற்றிவளைத்த இராணு... தேடுதல் நடத்தினர் எனத் தெரி... கிறது.

இதற்கிடையில் -

நேற்று அதிகாலை முதல் முற்பகல் 10 மணிவரை இணுவில் கிழக்குப் பகுதியைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று சோதனை நடத்தினர். ஆள் அடையாள ஆவணங்களைப் படையினர் பரிசோதித்தனர். (ஒ-49)

## தோட்டத்தில் பாய்ந்த தண்ணீரில் மின் கசிந்து மாணவன் மரணம்!

தோட்டத்திற்கு நீர் இறைத்துக் கொண்டிருந்தவரான மாணவன் ஒருவன்பாய்ந்த தண்ணீரில் கசிந்த மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.

நேற்று மாலை சித்தன்கேணியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டை பிளவத்தை கண்ணகை அம்மன் வீதியைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் மாணவருமான கன்னலிங்கம் தரணீதரன்(வயது 16) என்பவரே உயிரிழந்தார்.

இவர் தோட்டத்திற்கு நேற்று மாலை தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்தார். வீதியோர மின்சாரக் கம்பத்தை இழுத்துக்கட்டிய இழுவைக்கம்பி இத்தோட்டத்துக்குள் பொருத்தப்பட்டிருந்தது.

மின் ஒழுக்குக் காரணமாக இழுவைக் கம்பியூடாகப் பாய்ந்த மின்சாரம், தண்ணீரில் கசிந்து மாணவரைத் தாக்கியதாகக் கருதப்பட்டது.

இளைஞனின் சடலம் சங்கானை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டது. (ஒ-13-24-119)

## பிரதான வீதிகளில உள்ள தடைகளை அகற்ற விரைவில் நடவடிக்கையாம்

யாழ்ப்பாணம்,மே 1

யாழ். நகரின் பிரதான வீதிகளில் அமைக்கப்பட்டுள்ள வீதித் தடைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு யாழ். உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் எரிக் பெரேரோ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நகர்பகுதியில் உள்ள பிரதான வீதிகளில் வீதித் தடைகள் குழிகளாகவும், மேடுகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனால் மக்களின் போக்குவரத்து அதிகமாக உள்ள நேரங்களில் விபத்துகள் ஏற்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

மேலும் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் சேதமடைகின்றன என்றும் மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக இராணுவத் தளபதியுடன் உரையாடவுள்ளேன்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (14)

## வேலணையில் யுவதிக்குச் சூடு!

குடத்தனை,மே1

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யுவதி ஒருவர் நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

வேலணை 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரத்தினசிங்கம் போதினி (வயது-29) என்ற யுவதி நேற்றிரவு 6.30 மணியளவில் கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தசமயம் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இடுப்பிலும், கையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். (ஒ-13-78)

## யாழ்.வலய அதிபர்களுக்கு

யாழ்ப்பாணம்,மே1

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு அலுவலகத்துக்கு சமுகமளித்து ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளைப் பொறுப்பேற்குமாறு வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

*(முன்னர் வந்த செய்தி மூன்றாம் பக்கத்தில்)*

## கொள்ளை முயற்சி முறியடிப்பு சிக்கிய நபர் நையப்புடைப்பு



சுதுமலைப் பகுதியில் பொதுமக்களால் நையப் புடைக்கப்பட்ட நபர்.

யாழ்ப்பாணம்,மே 1

சுதுமலை சாவற்கட்டுப் பகுதியில் உள்ள வீடொன்றில் கொள்ளை அடிக்க முயற்சித்தவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களால் நையப் புடைக்கப்பட்டார். இதில் படுகாயமடைந்த அவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

குறிப்பிட்ட வீட்டிற்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவு சுமார் 6 பேர் அடங்கிய கும்பல் வாள்கள்,கத்திகள் போன்றவற்றுடன் வந்து. வீட்டின் ஜன்னல்களையும் கதவையும் உடைத்து உட்புகுவதற்கு இந்தக் கும்பல் முயற்சித்தது.

இந்த வேளையில் அங்கு திரண்ட பொதுமக்கள் அக்கும்பலை விரட்டியடித்தனர். அக்கும்பல் தப்பியோடியது. அக்கும்பலைச் சேர்ந்தவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களிடம் சி...னார். பொதுமக்களால் நையப்புடைக்கப்பட்ட அவர் படுகாயமடைந்தார். கை,கால்கள் க...றால் பிணைக்கப்பட்டு குற்றுயிராக வீதியில் அவர் விடப்பட்டார். பின்ன பொலீஸார் ...வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர். (...22)

## பழ வியாபாரியின் தலை பொலித்தீன் பைக்குள்!

### வவுனியாவில் அதிர்ச்சிச் சம்பவம்

கொழும்பு,மே 1

வவுனியாவில் காணாமற்போன பழ வியாபாரி ஒருவரின் துண்டிக்கப்பட்ட தலை நேற்றுக் காலை வவுனியா, வைரவப் புளியங்குளத்தில் பொலித்தீன் பை ஒன்றுக்குள் கிடக்கக் காணப்பட்டதாக வவுனியாப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, தோணிக்கல்லைச் சேர்ந்த பழ வியாபாரியான தருமசேகரன் (வயது-24) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமற்போயுள்ளார் என அவரது உறவினர்கள் பொலீஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலொன்றின்படி வைரவப்புளியங்குளத்தில் துண்டிக்கப்பட்ட தலையொன்றை பொலித்தீன் பை ஒன்றுக்குள் இருந்து நேற்று தாங்கள் மீட்டனர் எனவும் -

அந்தத் தலை மேற்படி வர்த்தகருடையது என அடையாளம் காணப்பட்டது எனவும் - பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பழ வியாபாரி இவ்வாறு தலை துண்டிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதற்கான காரணம் இதுவரை புலப்படவில்லை என்றும் தெரிவித்துள்ள வவுனியா பொலீஸார் இவ்விடயம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## பேசாலை அகதி முகாமில் ஏழு இளைஞர்கள் கைது!

கொழும்பு,மே 1

மன்னார் பேசாலையில் அமைந்துள்ள அகதிமுகாம் ஒன்றில் நேற்றுக்காலை பொலீஸாரும் கடற்படையினரும் கூட்டாக இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அம்முகாமில் தங்கியிருந்த ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் தற்போது மேலதிக விசாரணைகளுக்காகத் தலைமன்னார் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பேசாலையில் உள்ள இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபன வளாகத்தில் அமைந்திருக்கும் இந்த அகதிமுகாமை பொலீஸாரும் கடற்படையினரும் ஒன்றிணைந்து நேற்று அதிகாலை ஐந்து மணியளவில் சுற்றி வளைத்தனர்.

பின்னர் காலை எட்டுமணியளவில் முகாமிற்குள் நுழைந்து சோதனையில் ஈடுபட்டனர். முகாமில் தங்கியுள்ள ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள் என அனைவரும் துருவித்துருவிச் சோதனையிடப்பட்டனர்; விசாரிக்கப்பட்டனர்.

அப்போது சந்தேகத்தின் பேரில் முகாமில் தங்கியிருந்த ஏழு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் பேசாலை பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக தலைமன்னார் பொலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டனர்.

தற்போது அவர்கள் அங்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தலைமன்னார் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி முகாமில் தங்கியிருப்பவர்கள் 1990ஆம் ஆண்டு கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இக்கைது தொடர்பாக மன்னார் அரச அதிபருக்கும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் இந்த அகதி முகாம் அதிகாரிகள் முறைப்பாடுகள் செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.






## இராணுவத் தளபதி மீதான தாக்குதல் எவ்வாறு நடந்தது?

கொழும்பில் அதி உயர் பாதுகாப்பான பகுதிக்குள் தற்கொலை பெண் குண்டுதாரி ஒருவர் நுழைந்து எவ்வாறு தனது செயற்பாட்டை நிறைவேற்றிக்கொண்டார் என்பது பற்றி கொழும்பு பத்திரிகையொன்று சில தகவல்களை வெளியிட்டுள்ளது.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ள விவரங்களை வைத்து இந்தச் செய்திக்கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

தற்கொலை பெண் குண்டுதாரியின் வயது 21 ஆக இருக்கவேண்டும். அவருடைய பெயர் அனோஜா குகனேசராசா என்றும் வவுனியாவைச் சேர்ந்தவர் என்றும் கருதப்படுகின்றது. கர்ப்பிணியாக தோற்றமளித்த அவர் இராணுவத் தலைமையகம் மற்றும் இராணுவ மருத்துவமனை செல்லும் பஸ் வண்டியில் காணப்பட்டுள்ளார் ஆனால் வரவேற்பாளர் பிரிவில் தோன்றி அடையாள அட்டையை சமர்ப்பித்து வருகையாளர்களுக்கான அனுமதிச்சீட்டை பெற்றுக்கொண்ட ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

ஆஸ்பத்திரியில் நோயாளர் காத்திருக்கும் பகுதிகளில் அமர்ந்திருக்கக் காணப்பட்டார். இப்பகுதி ஆய்வுகூடச் சோதனைகள் இடம்பெறும் பகுதியை உள்ளடக்கியது. அப்பெண்ணின் கையடக்கத் தொலைபேசி ஒலித்தபொழுது ஆஸ்பத்திரியின் முன்பக்கத்தில் இருந்துள்ளார். பின்னர் வீதியை நோக்கி நடந்துள்ளார். இந்தக் கட்டத்தில் லெப்டினன்ட் ஜெனரல் பொன்சேகாவின் மோட்டார் அணி புறப்பட்டுவிட்டது என்ற தகவலை யாரோ அவருக்கு அறிவித்திருக்கிறார்கள். இதை வைத்துத்தான் அவர் ஜெனரல் பொன்சேகாவின் வாகனத்தின் மீது பாய்ந்துள்ளார். சிம்காட்டைத் தவிர தொலைபேசியின் ஏனைய பகுதிகளை புலனாய்வாளர்கள் கண்டெடுத்து பொருத்திப் பார்த்துள்ளார்கள். தொலைபேசியின் சரியான இலக்கம் முதலியவற்றை தேடிக் கண்டுபிடிப்பதில் புலனாய்வாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

இந்தத் தொலைபேசி அழைப்பை எடுத்தவர் யார்? தற்கொலைத் தாக்குதல் நடத்திய பெண் இராணுவ வைத்தியசாலைக்கு வருவதற்கு உடந்தையாக அவரது கணவர் போல் செயற்பட்ட இராணுவ ஊழியர் யார்? - என்பன குறித்து குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

ஜெனரல் பொன்சேகாவின் காரின் மீது தற்கொலையாளி பாய்ந்தபோது அவருக்குப் பாதுபாப்பாக முன்னால் சென்ற மோட்டார் சைக்கிளின் காவலர் தன் காலால் அப்பெண்ணை உதைத்துத் தள்ளி தன்னையும் பலிகொடுக்காதிருந்தால் ராணுவத் தளபதி இப்பொழுது உயிருடன் இருக்கமாட்டார் என்று அக்கட்டுரை தெரிவித்திருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# உழைப்பாளர் உரிமைகளை உறுதிப்படுத்த புதிய சிந்தனை

மேதினியின் மேன்மக்களான உழைக்கும் வர்க்கத்தைப் போற்றும் மே தினம் இன்று.

அயர்வின்றிப் பாடுபடும் பாட்டாளி வர்க்கத்தின் பங்களிப்பில்தான் உலகம் இன்று இயங்கிக் கொண்டிருக்கின்றது.

முதலாளி வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிராக உலகத் தொழிலா ளர்கள் - உழைப்பாளர்கள் - ஒன்றுபட்டதன் மூலம் தமது உரிமைகளை நிலைநாட்டியதன் சிறப்பாகவே, தேசியங்கள், தேசங்கள் கடந்து உலகப் பெரு நிகழ்வாக மேதினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

ஆனால், உண்மையில் முதாளித்துவம் தோற்று அடங்கி விட்டதா? தொழிலாளர் துயர் துடைக்கப்பட்டு அவர்களுக்கு பிரகாசமான வாழ்வு உறுதிப்படுத்தப்பட்டு விட்டதா?

உழைப்பாளர் நாளாகிய இன்று அதுபற்றிய ஒரு சிந்தனை மீட்டல் பொருத்தமானதாக இருக்கும்.

இந்தப் பிரபஞ்சத்தின் ஓர் துளியான பூமியில் மானிட வரலாறு - மனித சரிதம் - போராட்டங்களோடு முன்நகர்கின்றது. சுதந்திரத்தை யும், சமத்துவத்தையும், நியாயத்தையும் வேண்டி சமூகங்கள் புரட்சிகளை நிகழ்த்துகின்றன; போராட்டங்களை முன்னெடுக்கின்றன.

கொந்தளிப்புகளும், நெருக்கடிகளும், முரண்பாடுகளும் விஞ்சி நிற்கும் மனித சமூகத்திலே வர்க்க வகைப்பாடு இந்தப் போராட்டங் களுக்கும், புரட்சிகளுக்கும் அடித்தளமிட்டது. அடித்தளமிடுகின்றது.

ஏழை, பணக்காரன் என்றும், ஆளுபவன், ஆளப்படுபவன் என்றும், ஒடுக்குபவன், ஒடுக்கப்படுவன் என்றும், சுரண்டுபவன், சுரண்டப்படுபவன் என்றும் சமூகம் எங்கும் பரவிப் பரந்து நிற்கும் முரண்பாடுகளே புரட்சிகளுக்கும், கிளர்ச்சிகளுக்கும் வித்திடுகின்றன.

மனிதர்கள் காடுகளில் வசித்து, வேட்டையாடி வாழ்ந்த காலத்தில் - அதைப் பொதுவுடைமைச் சமுதாயம் என்றும் கூறலாம் - சொத்துரிமைப் பிரச்சினை இருக்கவில்லை. ஆனால், காலப் போக்கில் மக்கள் விவ சாயத் தில் பட்டறிவு பெற்று, நிலத்தைப் பகிர்ந்து, விவசாய உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியதும் சொத்துப் பிரச்சினைகள் உருவாகின. வர்க்கங்கள் பிறந்தன. ஆண்டான் - அடிமை என்ற இழிநிலை வகைப் படுத்தல் தோன்றியது.

இந்த அடிமைச் சமுதாயத்தின் பரிணாமத்தில் பிரபுத்துவ அடக்கு முறை தோற்றம் பெற்றது எனலாம். பிரபுக்களும், கூலி விவசாயிகளும் என்ற முரண்பாட்டு வர்க்கங்கள் இரு வகைகளாகின.

அடிமைகளின் உற்பத்தியை - உழைப்பை - சுரண்டி விவசாய, கைத்தொழில் துறைகள் எழுச்சி பெற்றன.

கைத்தொழில் புரட்சியும், விஞ்ஞான தொழில்நுட்ப விருத்தியில் ஏற்பட்ட பாய்ச்சலும் மனித வாழ்விற்கு ஆதாரமான பொருளுற்பத்திப் போக்கில் பெரு மாற்றத்தைக் கொண்டுவர முதலாளி, தொழிலாளி என்ற இரு பெரும் வர்க்கங்கள் தோற்றம் பெற்றன.

இந்த முதலாளித்துவத்தின் வளர்ச்சி, பாட்டாளி வர்க்கமாகிய தொழிலாளர்களை - உழைப்பாளர்களை - அடக்கி, ஒடுக்கி, சுரண்டி வறுமையின் விளிம்புக்குத் தள்ள, பாட்டாளிகளின் புரட்சி வெடிக்கும், முதலாளித்துவம் தனக்குத்தானே புதைகுழி தோண்டிக் கொள்ளும், அந்தப் புதைகுழியிலிருந்து புதிய சோசலிஷ சமுதாயம் பிறக்கும் என்றெல்லாம் கனவு கண்டனர் பொதுவுடைமை வாதிகள்.

அத்தகைய சமுதாயத்தில் அனைத்து உற்பத்திச் சாதனங்களும், உடைமைகளும் பொது உடைமையாக்கப்படும், சமூக முரணிய பேதங்கள் முற்றாக நீங்கும், சுதந்திரமும், சமத்துவமும் பெற்ற மானு டம் நிலைக்கும் என்றெல்லாம் அப்போது கூறப்பட்ட எதிர்வுகள் நிஜத்தில் இடம் பெறவேயில்லை.

மாறாக, முதலாளித்துவம் விஸ்வரூபம் எடுத்து வருகின்றது. அது தேசியங்கள், தேசங்களின் எல்லை கடந்து சர்வதேச சக்தியாக - சிலந்தி வலைப்பின்னலாக - இந்தப் பூமிப் பந்தைக் கவ்வி, விஞ்சி, எழுந்து நிற்கின்றது.

வர்க்க முரண்பாடுகளை உள்வாங்கியபடி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் செழுமை பெற்று, ஸ்திரமடைந்து வரும் முதலாளித்துவத்தின் இறுக்கமான பிடிக்குள் பூகோளப் பந்து சிக்கி, நசியுண்டு வருகின்றது. உழைப்பாளர்களிடமிருந்து உறிஞ்சும் உற்பத்தி இலாபம் என்ற இரத்தத்தால் முதலாளித்துவ ஜந்துகள் மேலும் மேலும் வீங்கிப் பருக்க, உழைப்பாளர்கள் ஒடுங்கி வருகின்றார்கள்.

முதலாளிய பொருளுற்பத்தி, கைத்தொழில் மயமாதல், நவீனத்துவ மாக்கல், உலக மயமாதல் என்று பூமிக்கிரகத்தை பற்றிப் படர்ந்து வரும் புதிய போக்கு வர்க்க முரண்பாட்டை மேலும் கூர்மையடையச் செய்து, அதனை மானுட வாழ்வு முறையில் இருந்து அகற்ற முடியாத ஸ்திரப் படியாக உறுதிப்படுத்துகின்றது.

இத்தகைய முதலாளித்துவப் பிடியிலிருந்து உலகை விடுவிக்க புதிய புரட்சி ஒன்று உலகெங்கும் வியாபித்து வெடிக்க வேண்டும். அப்போதுதான் இந்த உழைப்பாளர் வர்க்கத்துக்கு உண்மையான விடுதலைக்குச் சாத்தியம் கிட்டும்.

ஆனால், அந்த விடிவுக்கான ஒளிக்கீற்றுக் கூட தென்படுவதா யில்லை. அதுதான் உண்மை. நிஜம்.

பூமிப் பந்திலிருந்து அகற்றவே முடியாத உறுதியோடு தன்னை ஸ்திரப்படுத்தியிருக்கும் முதலாளித்துவத்தின்பிடிக்குள், அடிமைத் தொழிலாளர்களின் உரிமைகள் உறுதிப்படுத்தப்படுவதற்கான புதிய சிந்தனை எழுவது இன்று காலத்தின் கட்டாயமாகும்.

## வலி.தென்மேற்கில் பரவலாக

# படைமுகாம்கள் முன்பாக நிறுவிய வேகத்தடைகளால் பெரும் சிரமம்

வலி.தென்மேற்கு,மே1

வலி.தென்மேற்கு - மானிப்பாய் இராணுவ முகாம் மற்றும் பொலீஸ் நிலையம் ஆகியவற்றின் முன்பாக - பிரதான சந்தியில் வீதியின் குறுக்காக மணல் கொண்டு வேகத்தடை அமைக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சண்டிலிப்பாய் இராணுவ முகாம் முன்றிலில் பிரதான வீதியிலும் - பண்டத்தரிப்பு இராணுவ முகாம் பிரதான வீதியிலும் வேகத்தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டுள்ளன.

ஒரு அடி உயரத்திற்கு இந்த மணல் அணை அமைக்கப்பட்டிருப்பதால் சிறிய ரக மோட்டார் சைக்கிள்கள் இந்த வீதிகள் வழியாகப் பயணிப்பதில் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளன எனக் கூறப்பட்டது. (எ-135)

# யாழ். வலய அதிபர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மே1

யாழ். கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு அலுவலகத்தில் சமூகமளித்து தமது பாடசாலைக்குரிய ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப்பரீட்சை முடிவுகளைப் பொறுப்பேற்குமாறு வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஏனைய கல்வி வலயங்களும் முடிவுகளை இன்று காலை அந்தந்த வலய அலுவலகங்களில் வைத்து பாடசாலைகளிடம் கையளிக்க ஏற்பாடாகியுள்ளது. (3)

# யாழ்.பெண் மருத்துவர் விடுதலை

கொழும்பு, மே 1

கொழும்பில் தேசிய மருத்துவ சபை கட்டடத்திற்குள் நுழைய முயன்றார் என்ற வகையில் மருதானைப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்த யாழ்ப்பாண மருத்துமனையைச் சேர்ந்த பெண் டாக்டர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மருத்துவமனையைச் சேர்ந்த உண்மையான மருத்துவர் என்பது புலன் விசாரணையில் தெரியவந்தமையையடுத்து அப்பெண் மருத்துவர் விடுவிக்கப்பட்டார் என மருதானைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையின் போது தமது கணவர் கனடாவில் வசிக்கிறார் என்றும் அவருடன் சேர்ந்துகொள்ள செல்வதற்காக மருத்துவ சபையிடமிருந்து விடுப்பைப் பெற்றுக்கொள்ளவே தாம் முயன்றார் எனவும் அப் பெண் மருத்துவர் குற்றப் புலன் விசாரணையாளர்களிடம் கூறினார் என்பது தெரியவந்துள்ளது. (ப)

## டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு

# பண்டத்தரிப்பு ஆஸ்பத்திரி சுற்றாடல் நேற்று சிரமதானம் மூலம் துப்புரவு

வலி.தென்மேற்கு,மே1

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலைச் சுற்றாடல் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் பணி புரியும் ஊழியர்கள், வலி.தென்மேற்குப் பிரதேசசபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஊழியர்கள், சுகாதாரத் தொண்டர்கள் உட்பட மற்றும் பலர் இந்தச் சிரமதானத்தில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்புப் பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஞா.தேவச்சந்திரனின் அறிவுறுத்தலுக்கு இணங்க பிரதேசத்திலுள்ள சனசமூக நிலையங்களின் அனுசரணையுடன் மேலும் பல இடங்களிலும் டெங்கு ஒழிப்பு சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடலியடைப்பு, சில்லாலை, பிரான்பற்று, சாந்தை, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் மக்கள் பங்களிப்புடன் இந்தச் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், டெங்கு நோய் விழிப்புணர்வு பிரசாரக் கருத்தரங்குகளும் பண்டத்தரிப்புப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என்.நிர்மலானந்தனின் அனுசரணையுடன் நடத்தப்பட்டன. (எ-135)

# பண்டத்தரிப்பில் பரவலாக வீதிச்சோதனை தீவிரம்

வலி.தென்மேற்கு,மே1

பண்டத்தரிப்புப் பகுதியில் படையினர் கடந்த வாரம் முதல் வீதிச் சோதனைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பெரியவிளான், வடலியடைப்பு ஆகிய பகுதிகளில் இராணுவத்தினர் இரவு வேளைகளில் வீதிரோந்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால், இரவு எட்டு மணிக்குப் பின்னர் வீதிகளில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

(எ-135)

# கடற்படையினரின் போக்குவரத்துக்கென மண்டைதீவில் புதிய வீதி நிர்மாணிப்பு

மண்டைதீவு, மே1

மண்டைதீவில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் தமது போக்குவரத்துக்கென புதிதாக வீதி ஒன்றை அமைத்துள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயத்துள் அடங்கும் மண்டைதீவு துறைமுகத்திலிருந்து கிழக்குக் கடற்கரையோரமாக இந்தப் புதிய வீதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தமது போக்குவரத்துக்கு புதிய வீதியை நிறுவிய கடற்படையினர் இதுவரை காலமும் பயன்படுத்தப்பட்டுவந்த வீதிகளூடான பயணத்தைத் தவிர்த்துவருகின்றனர் என்றும் -

தமது போக்குவரத்துக்கென நிறுவிய வீதியூடாக பொதுமக்கள் பயணிப்பதற்கு கடற்படையினர் தடைவிதித்து வருகின்றனர் என்றும் - தெரியவருகின்றது. (எ-88)

# வடமராட்சியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்ற ஏற்பாடு

வடமராட்சி, மே1

யாழ்.மாவட்டப் பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் நோய்த்தடுப்பு மருத்துவப் பிரிவின் ஏற்பாட்டின் வடமராட்சிப் பிரதேசத்தில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்பு மருந்து ஏற்றும் பணி நடைபெற்றுவருகிறது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் கடந்த 17 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுவரும் இப்பணி மே மாதம் 31ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் என யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவிலும் மே மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவிலும் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த் தடுப்புமருந்து ஏற்றப்படும்.


ஒவ்வொரு பிரிவிலும் உள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் உள்ள பொது இடம் ஒன்றில் வைத்து தடுப்பு மருந்து ஏற்றப்படுவதால் இதனை நாய் வளர்ப்போர் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ-173)

## நாளை

**சித்திரை 19**
**செவ்வாய்க்கிழமை**
**02.05.2006**
**திதி: பஞ்சமி**
**முன்னிரவு. : 10.27வரை**
**நட்சத்திரம் : திருவாதிரை**
**பின்னிரவு : 01.54 வரை**
**சுபநேரம் : 10.27- 11.57**
**ராகுகாலம் :02.57 - 04.27**


## உதயவாக்கு

***சிறந்த மனிதர்களின் வாழ்வு எமது வாழ்வை உயர்த்திக் கொள்ள வழிகாட்டுகிறது. காலமெனும் மணல் மேட்டில் அவர்களின் கால் சுவடுகள் காணப்படுகின்றன.*** - ஹென்றிவேட்ஸ்வேர்த்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் இடம்பெயர்ந்த மக்களின் அவலம்.....



வீதிகள், மர நிழல்களில் உறங்கும் தமிழர்கள்....





பாடசாலையில் தஞ்சம்.....



கட்டட இடிபாடுகள்.....



நலன்புரி முகாமில் ஒரு சிறுமி...

# ஈராக்கில் அமெரிக்கப் படைகளின் முதுகெலும்பை முறித்துவிட்டோம்!

## அல்கெய்டாவின் இரண்டாம் நிலைத் தலைவர் அல்-சவாஹிரி பெருமிதம்

லண்டன்,மே1

அல்கெய்டா தீவிரவாதிகள் 'அமெரிக்க இராணுவத்தின் முதுகெலும்பையே முறித்து விட்டார்கள்' என்று அல்கெய்டா இயக்கத்தின் இரண்டாம் நிலைத் தலைவரான ஆய்மான் அல் - சவாஹிரி கூறியிருக்கிறார்.

ஈராக்கில் இஸ்லாமிய இணையத்தளம் ஒன்றில் வெளியிடப்பட்ட வீடியோ ஒளி நாடாவில் அல்கெய்டாவின் இரண்டாம் நிலைத் தலைவர் ஆய்மன் அல் - சவாஹிரி அல்கெய்டா தீவிரவாதிகளால் மேற்கொள்ளப் பட்டுவரும் அனைத்து உயிர்த்தியாக செயற்பாடுகளையும் பாராட்டியுள்ளார்.

இஸ்லாமிய இணையத்தளம் ஒன்று அல் - சவாஹிரியின் ஒளி நாடாவை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தான் மக்களையும் இராணுவத்தையும் அதிபர் முஷாரப்பின் நிர்வாகத்துக்கு எதிராகப் போராடும்படி அவர் அதில் கேட்டுக்கொண்டுள்ளார்.

முக்கிய அல்கெய்டா தலைவர்களிடமிருந்து ஒரு வாரத்துக்குள் வந்துள்ள மூன்றாவது செய்தியாகும் இது.

ஏப்ரல் 23ஆம் திகதி ஒஸாமா பின்லேடனின் செய்தி வெளிவந்தது. இரு தினங்களுக்குப் பிறகு ஈராக்கிய தீவிரவாதி அபு முஸாப் அல் - சார்க்காவியின் செய்தி ஒளிபரப்பாயிற்று.

எகிப்து, ஜோர்டான்,சவூதி அரேபியா மற்றும் ஈராக்கிய தலைவர்களை சவாஹிரி துரோகிகள் என்று வர்ணித்தார் ஈராக்கிய தீவிரவாதிகளைப் பாராட்டியுள்ள அவர் அமெரிக்கா, பிரிட்டிஷ் மற்றும் அவைகளின் நட்பு நாடுகள் எதையும் சாதித்துவிட வில்லை. இழப்புகளையும் அழிவுகளையும் துரதிர்ஷடங்களையும் மட்டுமே சம்பாதித்துள்ளார்கள் - என்றார்.

ஈராக்கில் மட்டும் மூன்று ஆண்டுகளில் 800 தியாகம் நிறைந்த போராட்டங்களை அல்கெய்டா நடத்தியுள்ளது. இதனால் ஈராக்கில் அமெரிக்காவின் முதுகெலும்பு முறிக்கப்பட்டுவிட்டது - என்றார்.

பாகிஸ்தான் மக்களுக்கும் இராணுவத்துக்குமென வெளியிடப்பட்ட அச் செய்தியில்-

''பாகிஸ்தான் இராணுவத்தை அதிபர் முஷாரப் உள்நாட்டு யுத்தமென்னும் ஏரிக்கிடங்கில் போட்டு வைத்துள்ளார். அதற்காக அமெரிக்காவிடமிருந்து பெருந்தொகையை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டுள்ளார்'' என்று சவாஹிரி கூறினார்.

''இந்தத் துரோகியை அதிகாரத்திலிருந்து அகற்றுங்கள்'' என்று பாகிஸ்தான் மக்களைக் கேட்டுக்கொண்டார். பாகிஸ்தானிலோ ஆப்கானிஸ்தானிலோ முஸ்லிம்களைக் கொல்வதற்கான தமது தளபதிகளின் கட்டளைகளை மீறும்படி பாகிஸ்தான் இராணுவத்தினரை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

எகிப்தில் பிறந்த சவாஹிரி பின்லேடனுக்கு இரண்டாம் நிலையிலுள்ளவர் என்று கருதப்படுகிறார்.

2001ஆம் ஆண்டு தலிபானுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலின் பின்னர் இவ்விரு தலைவர்களும் பிடிபடாமல் தப்பி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

# நேபாளத்தின் புதிய பிரதமராக கொய்ராளா பதவிப்பிரமாணம்

காத்மண்டு,மே1

நேபாளத்தின் பிரபலமிக்க அரசியல்வாதியும் நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவருமான கிரிஜா பிரசாத் கொய்ராளா புதிய பிரதம மந்திரியாக சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டுள்ளார்.

நேபாளத்தில் ஜனநாயகத்தை மீளவும் செயற்படுத்தவேண்டும் என்று கோரி ஏழு கட்சி கூட்டணியினர் நடத்திவந்த பல வார கால போராட்டத்தின் பின்னர் நேபாள அரசர் ஜியானேந்திரா இறங்கிவந்து மீண்டும் நாடாளுமன்றத்தை அழைக்க சம்மதித்தார். அதன்பேரில் இப்பொழுது கொய்ராளா மன்னரின் முன் புதிய பிரதம மந்திரியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பிரதமர் பதவிப் பிரமாணம் செய்துகொள்வது கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்தாலும் கொய்ராளாவின் சுகவீனம் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

கொய்ராளா நேற்று தமது அமைச்சரவையை அறிவிப்பார் என்று எதிர்பார்க்கப் பட்டது.

84 வயதான கொய்ராளா நேபாளப் பிரதமராகப் பதவிவகிப்பது இது நான்காவது தடவையாகும்.

1940 ஆம் ஆண்டு அரசியலுக்குள் நுழைந்த கொய்ராளா ஜனநாயகத்துக்காகப் போராடியதன் காரணமாக 7 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்தவர். பழம்பெரும் அரசியல்வாதி என்ற முறையில் பரந்த அளவில் கௌரவிக்கப்படுபவர்.

(ப)

# பிறந்தநாளை சிறையில் கழித்தார் சதாம் ஹூசைன்



பக்தாத்,மே1

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹூசைன் தனது 69ஆவது பிறந்தநாளை சிறையில் கழித்தார். கடந்த மூன்று ஆண்டுகளாக அவர் தன் பிறந்தநாளை சிறையிலேயே கழித்து வருகிறார்.

1979ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டுவரை ஆட்சியில் வலிமையோடு இருந்தபோது கோலாகலமாகக் கொண்டாடப்படும் அவரது பிறந்தநாள் தேசிய விடுமுறையாகவும் அனுசரிக்கப்படும்.

சதாமின் பிறந்த ஊரான திக்ரித்தில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஏதும் காணப்படவில்லை. ஆனால், கடந்த பெப்ரவரியில் குண்டுவெடிப்பினால் பெரும் கலவரம் மூண்ட சமாராவில் சதாமுக்கு இன்னும் செல்வாக்கு நீடிக்கிறது.

சிறையில் சதாம் கழித்த பிறந்தநாள் பற்றிக் கேட்டதற்கு 'முடிந்துபோன சதாமின் வாழ்க்கைக்கு புது வண்ணம் பூசுவதில் எங்களுக்கு ஆர்வமில்லை' என்று இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ)

# உலக அரங்கில்

# இந்தியப் பொறியியலாளரை தலிபான்கள் கொன்றனர்!

## ஈனச்செயல் என்று இந்திய அரசு கண்டனம்

காபூல்,மே1

தலிபான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இந்திய தொலைத்தொடர்பு பொறியியலாளர் சூரிய நாராயணன் கொலைசெய்யப்பட்டார். அவரது சடலம் நேற்றுக் காலைநேரத்தில் ஸாபுல் பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாக ஆப்கானிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் பணியாற்றிவரும் 11பேர் 24 மணிநேரத்துக்குள் வெளியேற வேண்டும். இல்லையெனில் சூரியநாராயணனைக் கொன்றுவிடுவோம் என தலிபான்கள் சனிக்கிழமை மிரட்டல் விடுத்திருந்தனர். அவரை விடுவிப்பதற்கு தலிபான்கள் பிணைத்தொகை எதையும் கோரவில்லை.

ஹைதராபாத்தைச் சேர்ந்த சூரியநாராயணனுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர்.

**மன்மோகன்சிங் கண்டனம்**

தலிபான்களால் கடத்தப்பட்ட பொறியியலாளர் சூரிய நாராயணன் கொலைசெய்யப்பட்டதற்கு பிரதமர் மன்மோகன்சிங் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

'ஒன்றுமறியாத இந்தியரைக் கொன்றது தலிபான்களின் மிருகத்தனமான செயல், இந்தியர் அனைவரும் தீவிரவாதிகளை வேரோடு அழிக்க உறுதிபூணுவோம். சூரியநாராயணனின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்று ஒரு செய்தியில் பிரதமர் தெரிவித்திருக்கின்றார். *(முன்னர் வந்த செய்தி, படம் 5ஆம் பக்கத்தில்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தி. மு. க - அ. தி. மு. க. இடையே இம்முறை கடும் போட்டி இருக்கும்

## கருத்துக் கணிப்பில் தகவல்

புதுடில்லி,மே.1

தமிழகத்தில் மே 8 இல் நடைபெற உள்ள சட்டப் பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணிக்கும் தி.மு.க.கூட்டணிக்கும் இடையே போட்டி கடுமையாக இருக்கும் என்று கருத்துக் கணிப்பில் தெரியவந்துள்ளது.

'ஆசியன் ஏஜ்' மற்றும் 'ஏசி நீல்சன்' ஆகியன இணைந்து இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தியுள்ளன.

இத் தேர்தலில் ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. - தி.மு.கவை விட 1 சதவீதம் கூடுதலாக வாக்கு பெறக்கூடும். இது அதன் வெற்றிக்கு உதவும் என்று தெரிய வந்துள்ளது.

கருத்துக் கணிப்பில் பங்கேற்றவர்களில் 52 சதவீதம் பேர், முதல்வர் என்ற முறையில் ஜெயலலிதா சிறப்பாக அல்லது மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார் என கருத்து தெரிவித்துள்ளனர்.

முதல்வராக வரத் தகுதியுள்ளவர் என 47 சதவீதம் பேர் ஜெயலலிதாவுக்கும் 46 சதவீதம் பேர் கருணாநிதிக்கும் ஆதரவாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு 48 சதவீதமும் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கு 47 சதவீதமும் வாக்குகள் கிடைக்கலாம் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 66 தொகுதிகளில் இந்த கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. (ஐ) (39)

# கடத்தப்பட்ட இந்தியப் பொறியியலாளரை கொன்றுவிடப் போவதாக தலிபான் மிரட்டல்

காபூல்,மே1

கடத்தப்பட்ட இந்திய பொறியியலாளர் சூரிய நாராயணனை கொல்லப்போவதாக தலிபான் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.


ஆப்கானிஸ்தானில் பணியாற்றி வரும் இந்தியர்கள் 11 பேரும் 24 மணிநேரத்துக்குள் வெளியேறவேண்டும். இல்லையெனில் சூரிய நாராயணனைக் கொன்றுவிடுவோம் என அவர்கள் மிரட்டியுள்ளனர். இவர் கடந்த ஜனவரியில்தான் ஆப்கானிஸ்தானுக்கு வேலைக்குச் சென்றார்.

இதற்கிடையில், அவரை விடுவிக்க அவரைக் கடத்திச் சிறை வைத்துள்ள தலிபான்கள் பிணைத் தொகை எதையும் கோர வில்லை என்று அதன் செய்தித் தொடர்பாளர் என்று கூறிக்கொள்ளும் யூசுப் அகமதி தெரிவித்துள்ளார்.

'நாங்கள் கடத்திச் சென்றுள்ள இந்தியாவைச் சேர்ந்த என்ஜினியர் சூரியநாராயணன் பத்திரமாக உள்ளார். எங்களது தலைமையில் இருந்து கட்டளை ஏதும் வராததால் இந்த விடயத்தில் நாங்கள் எந்த முடிவும் எடுக்கவில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தைச் சேர்ந்த சூரியநாராயணனுக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர்.

தலைநகர் காபூலுக்கும் தலிபான்களின் பிறப்பிடமான காந்தஹாருக்கும் இடையே ஜாபுல் மாகாணத்தில் உள்ள நெடுஞ்சாலையில் சூரிய நாராயணன் கடத்தப்பட்டார். (ஐ)



ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ள ஆந்திரத்தைச் சேர்ந்த சூரிய நாராயணனின் மனைவி மஞ்சுளா அவரது குழந்தைகள் அழுது புலம்புகின்றனர்.

## இந்தியச் செய்திகள்

# அமைச்சுப் பொறுப்பிலிருந்து மாறனை வெளியேற்றுங்கள்!

## பிரதமர் மன்மோகனுக்கு வைகோ கடிதம்

சென்னை,மே1

மத்திய அமைச்சர் தயாநிதி மாறனை அமைச்சர் பொறுப்பில் இருந்து நீக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகனுக்கு ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது:-

'டாடா- ஸ்டார்' ரீ.வி நிறுவனங்களின் 'டி.டி.எச்.' உரிமத்தில் 33 சதவீதப் பங்கைப் பெறுவதற்காக தயாநிதி மாறன் கட்டாயப்படுத்தியதையும் அது நிறைவேறாததையும் நான் அறிவேன். பங்குகளை விற்கத் தயாராக இல்லை என்று 'டாடா' நிறுவனம் கூறியபோது, அந்நிறுவனத்தின் தலைவர் ரத்தன் டாடாவை, அவரது தொலைத் தொடர்பு நிறுவனத்தை ஒழித்து விடுவதாக தயாநிதி மாறன் மிரட்டியுள்ளார்.

பல ஆண்டுகளாகத் துணிவுக்கும் நேர்மைக்கும் உரிய செய்தித்தாளான '' நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை மேற்கொண்ட புலனாய்வு, நான் பேசியதையெல்லாம் உண்மை என நிரூபித்திருக்கிறது.

தயாநிதி மாறனுக்கு அமைச்சரவையில் கொடுக்கப்பட்ட இலாகா, பொது நலனுக்கு உகந்தது அல்ல. உங்களைப் போன்ற நேர்மையான மனிதர் பிரதமர் பதவியில் இருக்கும்போது இது போன்ற மோசமான நிகழ்வுகள் ஏற்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நாட்டின் நலனுக்காக தயாநிதி மாறனை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார் வைகே. (ஐ) (39)

## இந்திய மாணவியின் நூல் அமெரிக்காவில் சர்ச்சை

இளம் வயதிலேயே நாவல் எழுதி புகழ் பெற்ற அமெரிக்கா வாழ் இந்தியரான கல்லூரி மாணவி காவ்யா விஸ்வநாதனுடை ய சமீ பத்திய புத்தகம் சர்ச்சையில் சிக்கியுள்ளது. இதனையடுத்து அந்தப் புத்தகந்தின் விற்பனை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

காவ்யா எழுதிய 'ஹவ் ஓபல் மேத்தா கோட் கிஸ்டு, கோட் வைல்ட் அன்ட் கோட் எ லைப்' என்ற புத்தகத்தை லிட்டில் பிரவுன் கம்பெனி சமீபத்தில் வெளியிட்டது. ஒரு லட்சம் பிரதிநிதிகள் அச்சிடப்பட்ட இந்தப் புத்தகத்தைப் பற்றி எல்லா ஊடகங்களும் செய்தி வெளியிட்டு, விளம்பரம் தேடித்தந்தன.

இந்நிலையில், மெகன் மெக்கேபர்டடி என்ற எழுத்தாளர் காவ்யா தனது எழுத்தை அப் பட்டமாகப் பிரதி பண்ணியிருப்பதாகக் குற்றம் சாட்டினார். புத்தக விற்பனையை நிறுத்தவும் அவர் நடவடிக்கைகள் மேற்கொண்டார். இதையடுத்து புத்தகத்தை வெளி யிட்ட நிறுவனம், தங்களிடம் மீதி இருக்கும் புத்தகங்களின் விற்பனையை நிறுத்தி வைத்துள்ளது. (ஐ) (39)

# கருத்துக்கணிப்பில் 3ஆவது இடம் மக்கள் மனதில் முதலிடம்

ஈரோடு,மே1

தேசிய முற்போக்குத் திராவிடர் கழகம் கருத்துக்கணிப்பில் 3ஆவது இடம் பிடித்துள்ளது. அதேநேரத்தில் மக்கள் மனதில் முதலிடம் பிடிக்கும் என அக்கட்சியின் தலைவர் விஜயகாந்த் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வேட்பாளர் அறிமுகக் கூட்டத்தில் அவர் கூறியதாவது:-

5 நாள்களாக எனது பிரசாரக் கூட்டம் நடத்தவிடாமல் இடையூறு நடக்கிறது. எனது கட்சிக் கூட்டத்தில் பொதுமக்கள் கூட்டம் அதிகரித்து வருவதும் இரண்டு திராவிட கட்சிகளுக்கும் பிடிக்கவில்லை. இதனால், எனது பிரசாரத்தை தடுக்க சதி செய்கின்றனர்.

தேர்தல் அறிக்கையில் இலவச அரிசி வழங்குவோம் என முதலில் அறிவித்தது. தே.மு.தி.க. தான் அதை அ.தி.மு.கவினர் கொப்பி அடித்து அறிவிப்பு வெளியிட்டுள்ளனர்.



விவசாயிகளுக்கு நிலுவையில் இருக்கும் கூட்டுறவுக் கடன்களை ரத்துச் செய்வோம் என தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய இரு கட்சிகளும் அறிவித்துள்ளன. விவசாயிகள் மேல் நலன் இருந்தால், நதிகளை இணைக்க முயற்சி எடுக்காதது ஏன்.

கருத்துக்கணிப்பில் தே.மு.தி.க. 3ஆவது இடம் பிடித்துள்ளது. ஆனால் மக்கள் மனதில் முதலிடம் பிடித்திருப்பது தேர்தலுக்குப் பின் தெரியும் - என்றார். (ஐ)

# கருத்துக்கணிப்புகள் அத்தனையும் பொய்ப்பதுமில்லை; நடப்பதுமில்லை!

தமிழ்நாட்டில் நடைபெற இருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.கவுக்கே அதிக ஆதரவு என்று சமீபத்தில் வெளியான கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்தது. அதே நேரத்தில், மற்றொரு கருத்துக் கணிப்போ தி.மு.க. அணிக்கே அதிக ஆதரவு என்று கூறியது. இத்தகைய கருத்துக் கணிப்புகள் கடந்த காலங்களில் நடைபெற்ற தேர்தல்களின்போது சில நேரங்களில் உண்மையானதும் உண்டு. சில நேரங்களில் அறவே பொய்த்துப்போனதும் உண்டு. கடந்த காலங்களில் தேர்தல்களின்போது நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புகள், அத்தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்புகள் ஆகியவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

**கணிப்பு பொய்யானது**

1980 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றிபெற்றது. அத்தேர்தலில் இரண்டே தொகுதிகளில் மட்டுமே அ.தி.மு.க. வென்றது. பின்னர் அ.தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. இதையடுத்து, சில மாதங்களில் நடைபெற்ற தமிழக சட்டப் பேரவைத் தேர்தலிலும் காங்கிரஸ் - தி.மு.க. கூட்டணி நீடித்தது.

வலுவான அக்கூட்டணியே மீண்டும் வெற்றிபெறும் என அப்போது வெளியான தேர்தல் கணிப்புகள் கூறின.

ஆனால், அனைவரது கணிப்புகளையும் பொய்யாக்கும் வகையில், தேர்தல் முடிவுகள் அமைந்தன. அ.தி.மு.கவும், அதனுடன் இணைந்து தேர்தலைச் சந்தித்த தோழமைக் கட்சிகளும் மகத்தான வெற்றியைப் பெற்றன. அ.தி.மு.க. மீண்டும் அறுதிப் பெரும்பான்மை பெற்று, ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது. அதேநேரத்தில், 1977இல் கிடைத்ததைவிட குறைவான இடங்களே தி.மு.கவுக்குக் கிடைத்தன.

**ரஜனி ஆதரித்தும்.....**

1989இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, மக்களவைப் பொதுத்தேர்தல் நடைபெற்றது. அத்தேர்தலுக்கு முன்பாக அரசு விழாவில் நடிகர் ரஜனிகாந் உட்பட திரைப்படக் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அப்போது கருணாநிதியின் கரத்தை வலுப்படுத்தவேண்டும் என ரஜனி குறிப்பிட்டார். உடனே, தி.மு.கவை ஆதரித்து ரஜனி பேசியதாக அப்போது பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின. அதுமட்டுமின்றி, அப்போது வெளியான கருத்துக் கணிப்புகள் கணிசமான தொகுதிகளில் தி.மு.கவே வெல்லும் என்றும் கூறின.

பா.ஜெகதீசன்

ஆனால், மொத்தம் உள்ள 39 மக்களவைத் தொகுதிகளில் நாகபட்டினம் தொகுதியைத் தவிர இதர 38 தொகுதிகளிலும் தி.மு.க. அணி தோற்றது.

நாகப்பட்டினத்தில் கூட தி.மு.க. அணியில் இடம்பெற்றிருந்த இந்திய கம்யூனிஸ்ட் தான் வென்றது.

**ஆட்சிக்கு வந்த பிறகு ஏற்பட்ட தோல்வி**

1989 சட்டப்பேரவைக்கான பொதுத் தேர்தலின்போது ஜெ.அணி, ஜா.அணி என அ.தி.மு.க. இரண்டாகப் பிளவுபட்டிருந்தது. இரட்டைச் இலைச் சின்னம் முடக்கப்பட்டிருந்தது. ஜெயலலிதா அணி சேவல் சின்னத்திலும், ஜானகி ராமச்சந்திரன் அணி இரட்டைப் புறா சின்னத்திலும் போட்டியிட்டன.

## சட்டப்பேரவைத் தேர்தல் 2006

தேர்தலில் தி.மு.க. வென்று ஆட்சிக்கு வந்தது. அதன்பிறகு அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்தன. அக்கட்சிக்கு மீண்டும் இரட்டை இலைச் சின்னம் கிடைத்தது. இந்நிலையில், தி.மு.க. ஆட்சிக்கு வந்த சிறிது காலத்துக்குள் மதுரை கிழக்கு, மருங்காபுரி ஆகிய இரு தொகுதிகளில் தேர்தல் நடைபெற்றது.

ஆட்சிப் பொறுப்பில் இருந்த தி.மு.க. தான் வெல்லும் என்கிற கருத்து அப்போது பரவலாக நிலவியது. ஆனால், இரு தொகுதிகளிலுமே அ.தி.மு.க. வென்றது.

அதேபோல, 1991 மக்களவைத் - சட்டப் பேரவைப் பொதுத்தேர்தல்களில் அ.தி.மு.க. - காங்கிரஸ் கூட்டணி மகத்தான வெற்றியைப் பெற்றது. அப்போது தி.மு.க.வின் சார்பில் துறைமுகம் தொகுதியில் போட்டியிட்ட கருணாநிதி மட்டுமே வென்றார். தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று, எம்.எல்.ஏ. பதவியை ஏற்காமல் விலகினார்.

இதனால் துறைமுகம் தொகுதியிலும், ஏற்கனவே வேட்பாளர் இறந்ததால் தள்ளி வைக்கப்பட்ட எழும்பூர் தொகுதியிலும் சிறிது காலத்துக்குப் பிறகு தேர்தல் நடைபெற்றது. அந்த இரு தொகுதியிலும் சிறிது காலத்துக்குப் பிறகு தேர்தல் நடைபெற்றது. அந்த இரு தொகுதிகளிலும் தி.மு.கவே வென்றது.

**மாறிய மக்கள் தீர்ப்பு**

2001 சட்டப் பேரவைத் தேர்தலின்போது தி.மு.க. அணிக்கு சாதகமான கணிப்புகளும் கருத்துகளுமே தமிழகம் முழுவதும் நிலவின.

தற்போது தி.மு.க. அணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் அப்போது அ.தி.மு.க. அணியில் அங்கம் வகித்தன. அ.தி.மு.க. கூட்டணியில் பிரதான இடத்தைப் பெற்றிருந்த த.மா.கா. தலைவர் ஜி.கே. மூப்பனார், ஓரிரு பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் மட்டுமே அ.தி.மு.க. அணி வெற்றிபெறும் என்றனர்.

அவர்கள் தெரிவித்த கருத்தை பலரும் விமர்சித்தனர். ஆனால், அத்தேர்தலில் பெரும்பாலானவர்கள் தெரிவித்த கணிப்புகளைப் பொய்யாக்கும் வகையில் மக்கள் தீர்ப்பு அளித்தனர். அ.தி.மு.க அணி வெற்றிபெற்றது. அறுதிப் பெரும்பான்மையுடன் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது.

1977 சட்டப்பேரவைத் தேர்தல், 1984 மக்களவை - சட்டப்பேரவைத் தேர்தல்கள் ஆகியவற்றின்போது அ.தி.மு.க. அணியே வெல்லும் என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக் கணிப்புகள் பலித்தன. 1996இல் தி.மு.க. - த.மா.கா. அணி வெல்லும் என்று தெரிவிக்கப்பட்ட கருத்துக் கணிப்பும் உண்மையானது. (நன்றி: தினமணி)(33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Immediate Vacancy

solidar
An INGO consortium including NPA, SAH and ASB

## Project Manager - Social Welfare & Inclusion project

**Applications are requested from persons with experience in Project Management, in the field of Health and Rehabilitation, Management and Co - ordination.**

Solidar is a consortium of international non - governmental organizations from 12 European countries supporting a broad portfolio of projects. The Solidar network in Sri Lanka comprises of three international NGO's Arbeiter - Samariter - Bund (ASB), Norwegian People's Aid (NPA), and Swiss Labour Assistance (SAH).

Based in Kilinochchi, the Project Manager will coordinate & manage a team engaged in the construction of a Trauma, Counseling and Rehabilitation Centre to respond to the needs of people with disabilities. In addition, the selected candidate will assist in the development of capacity building initiatives & skills development for our partner organisation. The selected candidate will work in collaboration with the Programme Manager to coordinate and implement activities relating to the project.

**Duties will include:**

- ❖ Overall implementation & management of the project ensuring that deadlines are met.
- ❖ Communication & liaison with all relevant parties, authorities and individuals.
- ❖ Planning and strategizing of Project activities and awareness programmes.
- ❖ Overall coordination, monitoring, evaluation, quality assurance & financial management.

**Required Qualifications :**

- ❖ At least 3 - 5 years experience in a relevant field with excellent references.
- ❖ Efficient organisational skills, strong management skills & a high level of professionalism.
- ❖ Exceptional communication skills with fluency in written/ spoken English & Tamil language. Knowledge of Sinhala would be an advantage.
- ❖ Proven ability to problem solve & take difficult decisions in a complex environment.
- ❖ Ability to work independently and motivated in relation to excellent social communication skills.
- ❖ A marked understanding of disability and beneficiaries requirements.

**Period of Contract**

One year - extension will be considered based on the performance and the requirement at the time.

Cover letter and curriculum vitae should be addressed to:


**Ms Gayathri Anandarajah, Solidar, No.156,
Jaffna Road, Paranthan.**
Or by email to : gaya2 info@yahoo.com

**Deadline for application is Monday 8th May 2006.**

(C/49144)

Norwegian People's Aid — ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V. — Swiss Labour Assistance SAH


# முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்

## பிரான்சிஸ் ஸ்ரனிஸ் லொஸ்

(ஸ்ரனி மாஸ்ரர்)

தோற்றம் 16-06-1933 மறைவு 01-05-2005

01.05.2005 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப ஒளி விளக்கின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று (01.05.2006) திங்கட் கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். புனித திரேசம்மாள் ஆலயத்தில் நடை பெறவுள்ள திருப்பலியிலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்பதோடு, தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

1/1 றக்கா வீதி,
சுண்டுக்குளி,யாழ்ப்பாணம் (49902)(51-11.14.26)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## செல்வி மறிலா ராஜென்சியா அஞ்சலோ

இல.13, சின்னக்கடை வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி மறிலா ராஜென்சியா அஞ்சலோ அவர்கள் 27-04-2006 வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் மைக்கல் அஞ்சலோ (படவரைஞர்)- அஞ்சலோ இன செனசியா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி லூயிஸ், கிறேஷியன், காலஞ்சென்ற திரு. திருமதி சந்தியோ மைக்கல் ஆகியோரின் பேர்த்தியும் யூட் ஹமில்டன் (கனடா), வோல்டர் கலிஸ்ரின் (கனடா), ஒட்றின் விஜிங்ரன், பமிலா டொறன்சியா (கனடா), ஜெனிற்றா விணோதினி (கனடா), ஜோய்கலிஸ்ரர் (கனடா), கொலற் ஆங்சனா (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் யூட் எழிலரசி (கனடா), வோல்டர் ஆன் ஜெனற், பேட்றம் உருத்ரா (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஜொனால்ரன், றினிற்றா ஆகியோரின் அன்பு மாமியும் அருட்தந்தை ஸ்ரனி அன்ரனி (அ.ம.தி), மைக்கல் எமில், எட்வேட்றோய், ஆஞ்சலி, அருள்நேசன், மேரிஆன், பொலின் ஆகியோரின் பெறாமகளும் பிரான்சிஸ் மேரி, தோமஸ் கொலின் (அமெரிக்கா), ஜேம்ஸ் அலிஸ்ரன் (ஜேர்மனி), ஜோஸ் பவல்ஸ் (கனடா), அருட்தந்தை ம.இ.ஜெயசீலன், ஏனஸ்ற், லோறன்ஸ் மேஜாய், றீற்றா கொலின், அன்னக்கிளி அல்ஸ்ரன், றஜனி பவல்ஸ், அருட்சகோதரி விக்ரோறியா (திருக்குடும்ப கன்னியர்மடம், பாசையூர்), மங்கயர்க்கரசி ஏனஸ்ற், ஞானசோதி மேஜாய் ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு இன்று (01.05.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

13, சின்னக்கடை வீதி,
யாழ்ப்பாணம். (49910)(26.19.14)

[illegible]

# நெஞ்சைவிட்டகலாத முதலாவது நினைவலைகள்

மலர்வு
17-05-1939

உதிர்வு
13-05-2005





## திருமதி சிவலிங்கம் நல்லம்மா

மனிதரில் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்த
மங்கையர் திலகமே! அன்பு அன்னையே!
புனித வாழ்வில் புண்ணியங்கள் பல செய்தீர்!
வைரவர் திருவடி பணிந்தீர்!
இனிய உமது முகம் எம் நெஞ்சை விட்டகலாது!
பாசமுடன் பேசி பண்புடனே வாழ்ந்திருந்தீர்
கனிந்த பேச்சும் நேச மொழியும் காதுகளில் கேட்கிறதே!
கடிதில் எமைப் பிரிந்து எங்கு சென்றீர் அம்மா?
நீர் சென்றீர் நாம் இங்கு அனாதரவாய் இருக்கின்றோம் அம்மா
உடல் தான் மறைந்தது உருவம் மட்டும் மறையவில்லை
ஆறுதலாய் சில நேரம் பேசிச் சிரிக்க
அவசரமாய் இங்கு வாரும் அம்மா.
ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

| பிள்ளைகள் | மருமக்கள் | பெறாமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|---|
| சிவனொளி (Swiss) | குணரத்தினம் | புஸ்பராணி | கோபி,ஜெயக்குமார் (Swiss) |
| செல்வம் | ரவீந்திரன் | செல்வராசா (Swiss) | நந்தகுமார், |
| வசந்தா | கவிதா (Swiss) | | பிரணவன் (Swiss) |
| ஜெயா | வனிதா (Swiss) | | பகீர்த்தனன் (Swiss) |
| | | | பகீர்த்தனா (Swiss) |
| | | | செல்வரூபா, தர்சா, நிரோஜா, |
| | | | மிதிலா, சோபிகா |

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

[illegible] சனசமூக நிலையம்,
[illegible]ட்டி,வல்வெட்டித்துறை. (49341)(51.11.14.26)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டாக்காலிக் கால்நடைகளை உடன் கட்டுப்படுத்துங்கள்

## பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள்

ஒட்டுசுட்டான்,மே1

வன்னிப் பகுதியில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் பல்வேறு நன்மை கருதித் தமது கால்நடைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்குமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது..

கட்டாக்காலிக் கால்நடைகளினால் வன்னியில் தற்போது பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுவதன் காரணமாகவே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னியில் தற்போது பெருமளவானோர் கால்நடை வளர்ப்பினை மேற்கொண்டு வருகின்றனர். அதிகளவான கால்நடைகள் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி கட்டாக்காலிகளாகவே அலைந்து திரிகின்றன. அவ்வாறு திரியும் கால்நடைகள் பயிர் நிலங்களுக்குள் நுழைந்து அங்குள்ள பயிர் நிலங்களைச் சேதப்படுத்துகின்றன. இதனால் விவசாயிகள் நட்டமடைந்து வருகின்றனர்.

அத்துடன், இரவு வேளைகளில் இந்தக் கட்டாக்காலிக் கால்நடைகள் வீதிகளில் படுத்துறங்குவதால் விபத்துகள் ஏற்படுவதுடன், விபத்தில் சிக்குப் கால்நடைகளும் உயிரிழக்கின்றன.

எனவே இவற்றைத் தவிர்க்கும் முகமாகக் கால்நடை வளர்ப்போர் தமது கால்நடைகளைக் கட்டுப்படுத்தி வளர்க்கவேண்டும் எனவும் கட்டாக்காலிகளாகத் திரியும் கால்நடைகள் இனிமேல் பிடிக்கப்பட்டுக் கிளிநொச்சிக்குக் கொண்டுசெல்லப்படும் எனவும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. (8-341)

# மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன

ஒட்டுசுட்டான்,மே1

நன்னீர் மீன்பிடித்தொழிலை ஊக்குவிக்கும் முகமாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நிதியுதவியுடனும் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடனும் முல்லைத்தீவு மாவட்டப் பசுமைப் புரட்சிக்கான நிறுவனம் (ஓ.ஜீ.ஆர்.) நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு உபகரணங்களை வழங்கியுள்ளது.

முத்தையன்கட்டுக்குளத்தில் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் எட்டுத் தொழிலாளர்களுக்கு மீன்பிடி வள்ளங்களும் 20 தொழிலாளர்களுக்கு மீன்பதனிடும் உள்ளீடுகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

(8-341)

# நிரந்தர வீடுகள் அமைத்துத் தருமாறு ஆனைவிழுந்தான் மக்கள் கோரிக்கை

அக்கராயன்,மே1

நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறு கிளிநொச்சி ஆனைவிழுந்தான்குளம் கிராம மக்கள் கிளிநொச்சி அரச அதிபர் மற்றும் தொண்டு நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1983ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடைபெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மாவட்டத்துக்கு வருகைதந்த மக்களுக்கென ஆனைவிழுந்தான் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது.

ஆனைவிழுந்தான் கிராமத்தில் தற்போது 300இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன.

1983ஆம் ஆண்டு சர்வோதயத்தின் ஏற்பாட்டில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு அவற்றில் இந்தக் குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டன. தமக்கு இதுவரை நிரந்தர வீடுகள் எதுவும் அமைத்துத் தரப்படவில்லை என இக்குடும்பங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

தென்னிலங்கையில் இருந்து சொத்துக்களை இழந்து கிளிநொச்சியில் தற்காலிக வீடுகளில் வசித்துவரும் தாம் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளதாகவும் - எனவே தமக்கு நிரந்தர வீடுகளை அமைத்துத் தருமாறும் அந்த மக்கள் கோரியுள்ளனர்.

(8-420)



ஜெயபுரம் தெற்கு, வடக்கு மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி நிறைவு விழா அண்மையில் ஜெயபுரம் மைதானத்தில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரை முழங்காவில் பிரதேச காப்புப் படையணிகளின் தளபதி டும்மா ஏற்றிவைப்பதையும் தேசியக்கொடியை முழங்காவில் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றுவதையும் கிடற்கரும்புலி மேஜர் கோபியின் திருவுருவப் படத்துக்கான சுடரினை கோபியின் தந்தையார் ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)

கிளிநொச்சி வன்னிச் செய்திகள்

# வன்னேரிக்குளம் பிரதேசத்தில் வைரஸ் காய்ச்சல் அபாயம்

## பலர் வைத்தியசாலையில் அனுமதி

பரந்தன்,மே1

அக்கராயன் வன்னேரிக்குளம் பிரதேசத்தில் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அக்கராயன் சுற்றயல்கூறு வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி இதனைத் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலையில் கடந்த, சில வாரங்களாகச் சிகிச்சை பெற்றுக்கொள்ள வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன், இவர்களில் அநேகமானோர் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வன்னேரிக்குளம் கிராமத்திலிருந்து சிகிச்சை பெற வருபவர்களில் கணிசமான நோயாளர்கள் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமை வைத்திய சோதனையின் போது தெரியவந்துள்ளது.

குழந்தைகள் முதல் முதியோர் வரை மேற்படி வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியர் சிற்றம்பலம் தெரிவித்தார்.

(8-352)

# காசநோய் விழிப்புணர்வு நிகழ்வுகள்

முல்லைத்தீவு,மே1

தமிழீழ சுகாதார சேவையினர் காசநோய் விழிப்புணர்வு மாதத்தின் தொடர்ச்சியான செயற்பாடாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இம்மாதம் 24ஆம், 25ஆம், 26ஆம் திகதிகளில் முறையே முள்ளியவளை கலைமகள் வித்தியாலயம், முல்லைத்தீவு ம.வி., வள்ளிபுனம் கனிஸ்ர உயர்தர வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் காசநோய் விழிப்புணர்வுக் கண்காட்சியும் வீடியோப் படக்காட்சியும் காசநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களும் நடத்தப்பட்டன.

இதில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்களென பெருமளவானோர் கலந்துகொண்டு பயன்பெற்றுள்ளனர். (8)

# மாலதி படையணி மாவீரர்களின் நினைவு

பரந்தன், மே1

மாலதி படையணியில் பல்வேறு தாக்குதல்களில் பங்குபற்றி மார்ச், ஏப்ரல் மாதங்களில் வீரகாவியமான 138 மாவீரர்களின் நினைவு நிகழ்வு கடந்த 23 ஆம் திகதி 2ஆவது லெப். மாலதி படையணியின் போர்ப் பயிற்சிக் கல்லூரியில் லெப்.கேணல் மதி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பொதுச்சுடரை 2ஆம் லெப். மாலதி படையணியின் மருத்துவப் பொறுப்பாளர் கதிர்மதி ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை 2ஆம் லெப். மாலதி படையணியின் பொறுப்பாளர்களில் ஒருவரான உஷா ஏற்றிவைத்தார். மாவீரர் நினைவு உரையை லெப்.கேணல் ராஜன் கல்விப் பிரிவு ஆசிரியர் நற்புகழ் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மாவீரர் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றன.

(8-352)

# அக்கராயனில் வீடமைப்புப் பணிகள்

கிளிநொச்சி,மே1

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி உதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தினால் அக்கராயன் மணியங்குளம் கிராமத்தில் 90 வீடுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு வீடுகளும் தலா 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படுவதாகவும் தற்போது பத்து வீடுகள் முடிவுறும் நிலையில் உள்ளதாகவும் ஏனைய 80 வீடுகள் அமைக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது எனவும் அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுதர்சன் தெரிவித்தார். (8-307)

# வட்டக்கச்சி உபதபாலகத்தின் பொன்விழாவும் மலர் வெளியீடும்

வட்டக்கச்சி,மே1

வட்டக்கச்சி உபதபாலகப் பொன்விழாவும் பொன்விழா மலர் வெளியீட்டு நிகழ்வும் கடந்த 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு உபதபாலக வளாகத்தில் நடைபெற்றது.

வட்டக்கச்சி உபதபாலதிபர் திருமதி ச.றோகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் ச.திருமாறன் தமிழீழ தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மங்கள விளக்கை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், கிளிநொச்சி பிரதேச தபால் அத்தியட்சகர் சி.பூ.இராசதுரை ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

பிரதம விருந்தினர் உரையை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் நிகழ்த்தினார்.

சிறப்பு நிகழ்வாக இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் நடன நிகழ்வு இடம்பெற்றது

பொன்விழாவை முன்னிட்டு வட்டக்கச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு தேசிய சேமிப்பு வங்கியில் பணம் வைப்புச்செய்து வைப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

அடுத்து பொன்விழா மலர் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. பொன்விழா மலரை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் வெளியிட்டு வைக்க வன்னியின் தொலைத்தொடர்பு நிலைய உரிமையாளர் சுரேஸ் முதல் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

நூல் ஆய்வுரையை கரைச்சிப் பிரதேச சபை பதில் விசேட ஆணையாளர் திருமதி ச.மணிமேகலை, கரைச்சிப் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி சி.நித்தியானந்தன், இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய அதிபர் சி.பாலகிருஷ்ணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் தபாலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள், பொது அமைப்புகளைச் சார்ந்தோர் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

(8-405)

# கண்டாவளைப் பிரதேசத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

## தென்னைமரங்கள் அழிக்கப்படுகின்றன

பரந்தன்,மே1

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலும் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காட்டு யானைகளின் அட்டகாசம் காரணமாக தென்னை மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் கிளிநொச்சி - கல்மடுநகர் பகுதியிலுள்ள மூலிகைத் தோட்டப்பகுதிக்கு இரவுவேளைகளில் வந்த காட்டுயானைகள் மூலிகைத்தோட்டத்திற்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் 25 தென்னைகளை அடியோடு முறித்து அழித்துள்ளன.

இது தொடர்பாகக் கண்டாவளைப் பிரதேச செயலர் சீ.சத்தியசீலனுக்கு அப்பகுதி மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

யானைகளால் அழிக்கப்பட்ட தென்னை மரங்களின் தோட்ட உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனையடுத்து பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கண்டாவளைப் பிரதேச செயலர் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-352)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 10 - 1950



மறைவு 12 - 05 - 2005

### அமரர் தங்கவேல் வரதலட்சுமி

*(அம்மன் கோயிலடி, வல்வெட்டித்துறை)*

திதி: பஞ்சமி (02-05-2006)

அன்று எமது அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலியாக வரும் 02-05-2006 அன்று அன்பு திட்டம், 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

தற்காலிக முகவரி:
அன்புதிட்டம்,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

நிரந்தர முகவரி:
(வரதலட்சுமி உணவகம்)
அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை.

(49901)(26-39-11-14


## வித்தியாரம்ப தின நிகழ்வு

கோப்பாய்,மே 1

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவப் பெற்று 75 ஆண்டுகளைக் குறிக்கும் வித்தியாரம்ப தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் உள்ள ஸ்ரீ சோமஸ்கந்தர் ஆலய முன்றிலில். கல்லூரி அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வுகளில் விசேட பூஜையைத் தொடர்ந்து ''கார்நிகர் கொடையினன்'' என்ற பொருளில் ச.லலீசன் ஆசிரியரின் சொற்பொழிவு இடம்பெறும். (3-72) (39)

## சமுத்திராதேவி நயினாதீவிலிருந்து சேவையில் ஈடுபடும்

தீவுப்பகுதிச் சேவையில் உள்ள அம்புலன்ஸ் மோட்டார்ப்படகு சமுத்திராதேவி இன்று திங்கட்கிழமை தொடக்கம் நயினாதீவில் இருந்து சேவையை ஆரம்பிக்கவுள்ளதாகத் தெரிகின்றது.

இந்தப் படகு நெடுந்தீவுக்கான சேவையில் இருந்ததால் இதுவரை குறிகாட்டுவான் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தது. தற்சமயம் கியூமெடிக்கா நிறுவனம் நெடுந்தீவுக்கென தனியான அம்புலன்ஸ் மோட்டார்ப் படகை வழங்கியிருப்பதைத் தொடர்ந்து சமுத்திராதேவி நயினாதீவில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து ஏனைய தீவுகளுக்கு நோயாளர் சேவையை நடத்தவுள்ளது. (3-111) (39)

## ஆங்கிலப் பயிற்சி வகுப்பு

பண்டிதர் வேலுப்பிள்ளை நிதிய அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலய ஆங்கில பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் எ.ஜே.தேவராசாவின் வழிநடத்தலில் மேற்கொள்ளப்படும் இப்பயிற்சி வகுப்புகளுக்கான நிதி உதவியினை லண்டனில் உள்ள பண்டிதர் வேலுப்பிள்ளையின் பிள்ளைகளினால் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.(3-117) (39)


## கண்ணீர் அஞ்சலி (31ஆம் நாள்)

எமது பாடசாலை ஊழியரான கு.தயாபரன் அவர்களின் மாமன்

### சங்கரப்பிள்ளை இராசையா

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.*
யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை.

(49876)(26-39-11-14)

## அந்தியேட்டி அழைப்பு

செல்வி
### ஆனந்தவடிவேலு கங்காதேவி



மலர்வு 29.07.1974 உதிர்வு 17.03.2006

எமது அன்புச் செல்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக்கொள்வதுடன், 03.05.2006 புதன்கிழமை காலை நடைபெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறுஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்மன்கோயிலடி,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(49793)(18-39-11-14)

ஆனந்தவடிவேலு
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### சங்கரப்பிள்ளை இராசையா

தோற்றம் 12-07-1941 மறைவு 01-04-2006

அன்னாரின் பிரிவுச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் மற்றும் பலவழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (01.05.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். இந்த நிகழ்விலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுஅன்புடன் அழைக்கின்றோம்.

*முருகமூர்த்தி கோயிலடி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.*

தகவல்:
குடும்பத்தினர்.

## Jaffna College Institute of Technology
Vaddukoddai

### Apply for the following courses immediately

**A) Computer Certificate Courses**

1. MS OFFICE
   - MS Word
   - MS Excel
   - MS Access &
   - Power Point
2. Printing Technology
   - Page Maker
   - Photo Shop
   - Corel Draw
3. Computer Hardware
4. Visual Basic
5. Macromedia Flash
6. Maya

3- 4 months (Part time)

**B). Radio, T.V and Electronic Servicing Practice**
(ரேடியோ, ரீவி பழுதுபார்த்தல் முழு அளவிலான செயல் முறை பயிற்சிநெறி, UPS, Computer Power Supply, Monitor, CD Player, DVD Repairing)

காலம்: 6 மாதங்கள் (முழு நேரம்)

FOR APPLICATION FORMS AND DETAILS CONTACT:-
Director
Jaffna College Institute Of Technology
Vaddukoddai.

T.Phone:- 0602213139 E.mail:- jcit@sltnet. lk

(அ 49138) (39-11-14)

## 29 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### குமரையா தேவராஜன்

பிறப்பு 05.07.1950 இறப்பு 01.05.1977

பூப் போல் பூமியில் பிறந்தவனே
பூப் போல் உன் ஆயுளும் குறுகியதோ?
பூவின் வாசம் போல் உன் வாசமும்
புனிதமானதே
என்றும் உன் வாசம் எம்
சுவாசத்தோடு கலந்திருக்கும்.

28, நக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(49634) (39-11-14)

தகவல்:
மனைவி,
மகன்மார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 02-04-1931

மறைவு 02.04.2006



### திருமதி இராசா பாக்கியம்
(மூளாய் தெற்கு)

அன்னையே! ஆளாக்கிவிட்ட தாயே!
இகமதில் நாம் வாழவென்று ஈகையாய் எமை வளர்த்தாயே!
உயர்ந்து நாம் செல்ல ஊக்கம் பல கொடுப்பாயே!
எங்களின் பரிதவிப்பை ஏங்கித்தான் நீ சென்றாயோ!
ஐயத்துடன் நாமிருந்து ஒரு கணம் யோசித்து
ஒட்டோவில் கொண்டு சென்றோம் ஔடதம் எடுக்க முன்னர்
கனவாக ஓடியதோ உங்கள் உயிரம்மா!

02-04-2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி இராசா பாக்கியம் அவர்களின் 31ஆம் நாள் நினைவு நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (02-05-2006) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எமது குல விளக்கு அணைந்த செய்தி கேட்டு உடன் ஓடோடி வந்து உதவியவர்களுக்கும் மற்றும் தபால்,தந்தி, தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்தும் பல வழிகளில் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மூளாய் தெற்கு, சுழிபுரம். (49883) (39-11-14) - குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கொக்குவில்,சென்றலைட்ஸ் சம்பியனாகின

யாழ்ப்பாணம்,மே1

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான லீக் முறையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கே.ஸி.ஸி.ஸி. வி.க., சென்றலைட்ஸ் வி.க. ஆகியன வெற்றிபெற்று சம்பியனாகின.

யாழ். பல்கலைக்கழகக் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற பெண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. வி.கவை எதிர்த்து பமிலியன்ஸ் வி.க. மோதியது.

கே.ஸி.ஸி.ஸி. வி.க. அணி 41:18 என்ற புள்ளி அடிப்படையில் பமிலியன்ஸ் வி.க. அணியை வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பற்றீசியன்ஸ் வி.க. அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் வி.க. அணி மோதியது.

சென்றலைட்ஸ் வி.க. அணியினர் 55:52 என்ற புள்ளி அடிப்படையில் பற்றீசியன்ஸ் வி.க. அணியை வெற்றிகொண்டனர்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈ. எஸ்.பேரம்பலம் நிறுவனத்தின் உரிமையாளர் ஈ.எஸ்.நாகரத்தினமும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக உடற்பயிற்சிப் பிரிவு இணைப்பாளர் திருமதி ஜே.சரவணபவ ஐயர், கௌரவ விருந்தினர்களாக யாழ். கல்வி வலய (உடற்கல்வி) உதவிப் பணிப்பாளர் க.குமாரசாமி, யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டப் பயிற்றுநர் திருமதி றூபசிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(3-190)





யாழ்.மாவட்டக் கூடைப்பந்தாட்டச் சங்கம் லீக் முறையில் நடத்திய ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் யாழ். பல்கலைக்கழக கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக அணித் தலைவியிடம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திருமதி ஜே.சரவணபவஐயர் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வெற்றிபெற்ற சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணித் தலைவரிடம் பிரதமவிருந்தினர்ாக் கலந்துகொண்ட ஈ. எஸ்.பி.நாகரத்தினம் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : தமிழினியன்)*

## *கரபந்தாட்டப் போட்டியில் அடைக்கல அன்னை வெற்றி*

யாழ். பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அடைக்கல அன்னை இளைஞர் வி.க. வெற்றிபெற்றது.

இறுதியாட்டத்தில் ஜெட்லையினஸ் வி.கவை எதிர்த்து விளையாடிய அடைக்கல அன்னை இளைஞர் வி.க. அணியினர் 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.அடைக்கல அன்னை இளைஞர் வி.க. அணியைச் சேர்ந்த என்.பிரசன்னா சிறந்த வீரனாக தெரிவுசெய்யப்பட்டார். (3-190)




# இளையோருக்கான தடகளப்போட்டி: பல்கலை. மைதானத்தில் 12,13இல்!

வலி.வடக்கு,மே1

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கத்தினரால் இளையோர்களுக்காக நடத்தப்படும் தடகள விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 12,13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

10,12,14,16,18,20 மற்றும் 23 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

ஆண்கள், பெண்கள் பிரிவினர்களுக்கென நடத்தப்படவுள்ள போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகள் மற்றும் கழகங்களைப் பின்வருபவர்களுடன் தொடர்புகொண்டு தமது விண்ணப்பங்களைச்சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி விரிவுரையாளரும் சங்கத் தலைவருமான மா.இளம்பிறையன், நல்லூர் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தரும் செயலாளருமான க.விஜிதரன் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள விளையட்டு உத்தியோகத்தர்களிடம் கையளிக்கும்படி கோரப்பட்டுள்ளது. (3-86)

# யங்ஹென்றீஸ் சுற்றுப்போட்டி, மயிலங்காடு சம்பியனானது

வலி.வடக்கு,மே 1

இளவாலை யங்ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றுச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் சுன்னாகம் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன.

ஆட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரம் முதல் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடி பார்வையாளர்களின் பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டன.

முதல்பாதி ஆட்டம் முடிவடைந்த நிலையில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதிஆட்டத்தில் இரு அணிகளும் வெற்றிபெறவேண்டும் கோல்களைப்பெற வேண்டும் என்ற ஆக்ரோஷத்துடன் களம் இறங்கினார்கள்.

இந்த நிலையில் ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்கும் நிலையில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி தமது முதலாவது கோலை பெற்று அதனைக் காப்பாற்றிக்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டுக்கொண்டது.

றோயல் அணியினர் தாமும் கோல்கள் பெறும் முயற்சியில்தொடர்ந்து முயன்றபோதிலும் அதற்கான வாய்ப்புகளை எதிரணியினர் முறியடித்துக்கொண்டே இருந்தார்கள்.

ஆட்டம் முடிவடையும் போது ஞானமுருகன் அணியினர் 1: 0 என்ற கோல்கணக்கில் றோயல் அணியினரை வெற்றி கொண்டு சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

(3-86)

# பாடசாலைகள் மேசைப்பந்தாட்டம் சென்.ஜோன்ஸ், யூனியன் அணிகள் வெற்றி



யாழ்ப்பாணம்,மே1

யாழ்.மாவட்ட கல்வி வலயங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான - மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி, யூனியன் கல்லூரி அணிகள் வெற்றிபெற்றன.

யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்ற ஆட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதி ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி மோதியது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 3:0 என்ற செற் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை வெற்றிகொண்டது.

தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யூனியன் கல்லூரியை எதிர்த்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதியது.

யூனியன் கல்லூரி அணி 3:2 என்ற செற் கணக்கில் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அணியை வெற்றிகொண்டது. (3-86-190)

# யாழ். கோட்ட மட்டத்திலான தடகளப்போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே1

யாழ். கல்விக் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற தடகளப் போட்டியின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

### 11 வயதுப் பிரிவு

*75 மீற்றர் ஓட்டம்* - மகேந்திரன் (புனித ஜோன் பொஸ்கோ), கிறிஸ்தோபர் மாக்குலேற்றா (நாவாந்துறை றோ.க.வி.), சிபோறா தில்பேட்வின்சன் (திருக்குடும்ப கன்னியர் மடம்)-

*100 மீற்றர் ஓட்டம்* - காருண்யா மகேந்திரன் (புனித ஜோன் பொஸ்கோ), சிபோறா கில்பேட் வின்சன் (திருக்குடும்ப கன்னியர் மடம்), கிறிஸ்தோபர் மாக்குலேற்றா (நாவாந் துறை (றோ.க.வி.)-

*நீளம் பாய்தல்* - காருண்யா மகேந்திரன் (புனித ஜோன் பொஸ்கோ), நர்மதா மனோகரதாஸ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), டிலானி (புனித சாள்ஸ் ம.வி.)-

*உயரம் பாய்தல்* - துஷாரா தயா குணலிங்கம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பிருந்தா ரவீந்தினி யூட் சாந்தராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), தர்ஷா சொலமன் (புனித ஜோன் பொஸ்கோ)-

### 13 வயதுப் பிரிவு

*100 மீற்றர் ஓட்டம்* - பிரியங்கா இராஜசிறிப்பிரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), றொடிலின் றோஷக்கா ஜெயசீலன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), வினோதினி உதயசீலன் (புனித அந்தோனியார் மகளிர் வி.)-.

*200 மீற்றர் ஓட்டம்* - றொபிலின் றோஷக்கா ஜெயசீலன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), துவாரகா சிவகுமார் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), நிரோஷா இராஜேந்திரன் (திருக்குடும்ப கன்னியர்மடம்)-

*நீளம் பாய்தல்* - அனிஸ்ரா விக்ரர் சுரேஷ் (வேம்படி மகளிர் கல்லூரி), ஆர்த்திகா தனபாலன் (வேம்படி மகளிர் கல்லூரி), ஆன் கனிஸ்ரா ஜெபநேசன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)-

*உயரம் பாய்தல்* - பிரியங்கா இராஜசிறிப்பிரியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), துவாரகா சிவகுமார் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கிருஸ்டிக்கா (புனித மரியாள் வித்தியாலயம்)-

*4X100 அஞ்சல் ஓட்டம்* - சுண்டுக்குளி மளிர் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

### 15 வயதுப் பிரிவு

*100மீற்றர் ஓட்டம்* - மேரி தர்ஷினி இராஜகுலேந்திரன் (பாஷையூர் புனித அந்தோனியார் மகளிர் வித்தி.), ரதி இசபெல் அகஸ்ரின் (திருக்குடும்ப கன்னியர்மடம்), ஆன் சுபாங் கனிஸ்ரனிஸ்லஸ் (திருக்குடும்ப கன்னியர்மடம்)-

*200 மீற்றர் ஓட்டம்* - மேரி தர்ஷனி இராஜகுலேந்திரன் (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி.), துஷாறிகா விவேகானந்தன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆன் சுபாங்கனி ஸ்ரனிஸ்லஸ் (திருக்குடும்ப கன் னியர்மடம்)-

*400 மீற்றர்* - சுஜித்தா விங்கேஸ்வரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெயப்பிரியங்கா ஜெயசோதி (வேம்படி மகளிர் கல்லூரி), கம்சா சிவராஜா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)-

*நீளம்பாய்தல்* - ரதிசாந்தி மரியதாஸ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), கணிகை விமலராஜா (வேம்படி மகளிர் கல்லூரி), வினோதினி பத்மநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி)-

*உயரம் பாய்தல்* - சிந்துஜா ஜெயராஜா (திருக்குடும்ப கன்னியர்மடம்), வினோதினி பத்மநாதன் (வேம்படி மகளிர் கல்லூரி), ரதி சாந்தி மரியதாஸ் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)-

*குண்டு போடுதல்* - நசாந்தினி (வைத்தீஸ்வராக் கல்லூரி), கபிலேஸ்வரி கந்தசாமி (நாவாந்துறை றோ.க.வி.), தஷாகினி தெய்வேந்திரன் (வேம்படி மகளிர் கல்லூரி)-

*தட்டெறிதல்* - சங்கரி கிருஸ்ணமூர்த்தி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), அற்புதநாயகி பேக்மன்ஸ் (பாஷையூர் புனித அந்தோனியார் ம.வி., தேவதர்ஷிகா அருணானந்தன் (வேம்படி மகளிர் கல்லூரி)-

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மாரின் குருபூசைத்தின நிகழ்வுகளை ஒழுங்கு செய்ய திணைக்களம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே.1

நாயன்மார்களின் குருபூசைத்தினங்களை மாவட்டம் தோறும் நடத்துவதற்கு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடுகளைச் செய்துள்ளது என்று அதன் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக,இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் விடுத்த செய்திக் குறிப்பில்:-

இந்தத் திட்டத்திற்கமைய சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசு நாயனாரின் குருபூசை, பல்வேறு மாவட்டங்களிலும் அமைந்துள்ள இந்து ஆலயங்களில் கடந்த மாதம் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை சிறப்பு பூசைகளுடன் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை, வீரமுனை, இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி குருபூசை வைபத்தின் போது கூட்டுப்பிரார்த்தனை, அறநெறிப் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிய பேச்சுப் போட்டி, கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் செல்வி சுலோசனாவின் சிறப்புரை என்பன இடம்பெற்றன. வைபவத்திற்கான ஏற்பாடுகளை அம்பாறை மாவட்ட இந்து அபிவிருத்தி உதவியாளர் சா.பத்மகுமார் மேற்கொண்டிருந்தார்.

அதே தினம், பதுளை ஸ்ரீ மாணிக்க விநாயகர் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் மேற்படி குருபூசை தினவைபவம் நடைபெற்றது. பதுளை மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர் கள் பங்கு கொண்ட சொற்பொழிவுகள், நாடகம், வில்லுப் பாட்டு, நடனம், சிறப்புரைகள் என்பன இதில் இடம்பெற்றன. இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகளை பதுளை மாவட்ட இந்து அபிவிருத்தி உதவியாளர் கி.குணநாயகம் செய்திருந்தார். யாழ். மாவட்டத்துக்கான நிகழ்வு சித்தன்கேணி ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடை பெற்றது. வலிகாமம் பகுதிக்கான இந்து அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆலய பிரதம குரு பிரம்மஸ்ரீ சபா வசுதேச சர்மா நந்திக் கொடியை ஏற்றி ஆசியுரை வழங்கினார். சமூகஜோதி கா. கணேசதாசன், ஆலய பரிபாலன சபைத் தலைவர் சோ.தெய்வேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இந்துசமய கலாசாரத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க. நாகராசா இதில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்டார். சைவப் புலவர் கந்த. சத்தியதாசன், யாழ். பல்கலைக்கழக மாணவன் எஸ். பாலசண்முகன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவுகளும் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

வவுனியா மாவட்டத்திற்கான நிகழ்வு தோணிக்கல் ஆதிசிவன் ஆலயத்தில் நடைபெற்றது. வவுனியா அறநெறி ஒன்றியத் தலைவர் ஆ.கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேச அறநெறிப்பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிய வில்லுப்பாட்டு, பண்ணிசை, நாடகம், பேச்சுப் போட்டி ஆகியன இடம்பெற்றன.

வைபவத்திற்கான ஏற்பாடுகளை இந்து அபிவிருத்தி உதவியாளர் செல்வி கி.கலையமுதா மேற்கொண்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தென்மராட்சிப் பிரதேசத்திற்கு சுரேஸ் எம்.பி. நிதி ஒதுக்கீடு

தென்மராட்சி,மே.1

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் இவ்வருடத்திற்குரிய பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகளின் விவரங்கள் யாழ். அரச அதிபரினால் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுவருகின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரனால் தென்மராட்சிப் பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்ட 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களின் விவரங்கள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையம், மறவன்புலோ பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றுக்கு தளபாடக் கொள்வனவுக்கும்,தென்மராட்சி பிரதேச சிகை அலங்கரிப்பு நிலைய அலுவலக தளபாடக் கொள்வனவுக்கும்-

மிருசுவில் தவசிக்குளம் பாலர் பகல் பராமரிப்பு நிலையக் கட்டட புனரமைப்பு வேலைக்கும்-கைதடி தெற்கு சனசமூக நிலைய விளையாட்டு மைதான புனரமைப்பு வேலைக்கும் இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)




அண்மையில் யாழ்ப்பாணம் விஜயம் செய்த

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர்ஜியின்

வாழும் கலைப்பயிற்சி

இலவச அறிமுக உரை

நாள்: இன்று [01.05.2006] திங்கட்கிழமை மாலை 5 மணி

| இடம்: இளந்தொண்டர் சபை, கந்தசாமி கோயில் அருகில், இணுவில். | கம்பன் கோட்டம், நல்லூர் ரின் வீதி, நல்லூர். |
|---|---|

பயிற்சி நாள்கள்: 02.05.2006 முதல் 07.05.2006 வரை

பயிற்சிநேரம் : மாலை 4 மணி முதல் 6 மணி வரை

அன்பில் மலருங்கள்! உங்களை உணருங்கள்!

மேலும் தொடர்புகளுக்கு: (49906) (32-17-14)

0779059549, 0779059544, 0777157281

## கலாலயா

பயிற்சியகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கு அண்மையில்)

மகளிருக்கான துரித ஒரு மாத/ மூன்று மாதப் பயிற்சிகள்

* கேக் ஐஸிங், உணவு தயாரித்தல், கூந்தல் அலங்காரம், FABRIC PAINTING, பூவேலை, கைவேலை.
* அடிப்படைத் தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ் தைக்கும் முறை.
* அடிப்படை FACIAL மற்றும் மணமகள் அலங்காரங்கள்.
* 6 மாத கால தையற்கலை.

புதிய சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: 07-05-2006

புதிய கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பம்: 10-05-2006

மேலும் விவரங்களை தினமும் பி.ப. 2 மணிவரை நேரில் அறிந்துகொள்ளலாம்.

(சி-49142) (14-17)

உ

## மகாகும்பாபிஷேகம்

இருபாலை கிழக்கு சிவன்கோயில் ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் சுவாமி தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் 03.05.2006 புதன்கிழமை காலை 6.44 மணிமுதல் 8.45 மணிவரையிலான சுப முகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

எண்ணெய்க்காப்பு நிகழ்வு நாளை (02.05.2006) செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை நடைபெறும்.

ஆலய தர்மகர்த்தா,
சிவன் தேவஸ்தானம்,
இருபாலை கிழக்கு.

(49939) (03-14-17)




29.04.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

21 38 50 62 (05)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301046256 இலிருந்து 301061328

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 34,07,600/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 34,07,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 21 | 5,000/- | 1,05,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 403 | 1,000/- | 4,03,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,246 | 500/- | 6,23,000/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,380 | 40/- | 7,75,200/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 19,184 | 20/- | 3,83,680/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,74,527 | 10/- | 27,45,270/- |
| மொத்தம் | | | 60,15,150/- |
| தங்க நகைகள், [illegible] | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,13,767 | | 66,15,150/- |

[illegible]

இந்த புதன்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 41,41,050/-

[illegible]

| | |
|---|---|
| மாத்தறை | 301048946-7-36 |
| கம்பஹா | 301046396-6-34 |
| காலி | 301056971-5-93 |
| மட்டக்களப்பு | 301049933-9-65 |
| களுத்துறை | 301061275-6-08 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை




## கணேஸ்வரன் ரதிதேவி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14-02-1962 | 01-05-2004 |

வரணி வடக்கைப் பிறப்பிடமாகவும் சுவிற்ஸர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணேஸ்வரன் ரதிதேவி அவர்களின் 2 ஆம் வருட ஞாபகார்த்த தினமான இன்று (01.05.2006) திங்கட்கிழமை கும்பிட்டான்புலம் கற்பகப் பிள்ளையார் ஆலய முன்றிலில் உள்ள அன்னராது ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. நடேசன்
(தந்தை)

வரணி வடக்கு,
வரணி.

(49911) (54-14-17)

நினைவுச் சொற்பொழிவுகள், சான்றோர் கௌரவிப்பு

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 6ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி3,4,5,6,8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த நினைவுச் சொற்பொழிவுகளும் 9ஆம் திகதி நடைபெறவிருந்த சான்றோர் கௌரவிப்பும் தவிர்க்க முடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பீடாதிபதி
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

(சி-49154) (54-14-17)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

775 சிவப்பு

கன்னி



28-04-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5136126-5149944

வெற்றி இலக்கங்கள் 33 38 45 50

ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/- வெல்லப்படவில்லை

மொத்தப் பரிசுத் தொகை ரூபா 67,89,920/-
தொடர் இல. 4239133 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 மே மாதம் 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,03,195 | 10/- | 30,31,950/- |
| 2 இலக்கங்கள் | 27,908 | 20/- | 5,58,160/- |
| 1 இல+லக்கினம் | 27,502 | 30/- | 8,25,060/- |
| 2 இல+லக்கினம் | 2,485 | 100/- | 2,48,500/- |
| 3 இலக்கங்கள் | 738 | 500/- | 3,69,000/- |
| 3 இல+லக்கினம் | 61 | 5,000/- | 3,05,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | - | 10,00,000/- | - |
| மொத்தம் | | | 57,37,670/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,61,898 | | 67,89,920/- |

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா 16,77,100/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| காலி | 5143899-2-37 |
| மட்டக்களப்பு | 5136612-4-59 |
| கண்டி | 5137001-2-08 |
| கொழும்பு | 5136228-8-78 |
| பொலன்னறுவை | 5136630-1-12 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

★ தையல் ★ பூவேலை
★ சிகையலங்காரம் ★ தட்டச்சு
★ கேக் ஐசிங்

ஆகிய வகுப்புகள் 05.05.2006 முதல் ஆரம்பமாக இருப்பதால் பழக விரும்பும் மாணவர்கள் தங்களது பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்.

மிகவும் சிறந்த முறையில் பயிற்சிகள் வழங்கப்படும்
★ ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்பு: ப்ரீஷாயி பயிற்சி நிலையம்
மானிப்பாய் வீதி, உரும்பிராய் சந்தி.
T.P.: 0776617851 (49918)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் பஸ்நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதியில் சகல வசதிகளும் கொண்ட ஒருபரப்பு காணியுடன் ஒரு மாடிக் கடைக் கட்டடம் (முன்புறம் பின்புறம் பாதைகள் கொண்டது) தொடர்பு: T.P. 0713056177. (சி-49143)

நல்ல நிலையில் உள்ள லிஸ்ரர் என்ஜின், டைனமோ (இங்கிலண்ட்) அலுமினிய body - 14 அடியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 372, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். T.P. 6192 (49927)

கடைப் பாவனைக்கு உகந்த கண்ணாடி கதவிலான குளிர்சாதனப்பெட்டியுடன் இயங்கிக் கொண்டிருக்கும் மில் இயந்திரமும் விற்பனைகுண்டு. தொடர்புகள்: பு.குகதாசன், மருந்துக்கடை, இல.34, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (49909)

### காணி விற்பனைக்கு

திருநெல்வேலி, பணிக்கர் வளவில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 0773145686. (49915)

### ஆடு விற்பனைக்கு

குட்டி ஈனும் பருவத்திலுள்ள யமுனா பாறி ஆடு உடன் விற்பனைக்குண்டு. ஒரு போத்தல் பால் தரக்கூடியது. தொடர்பு: நவரெட்ணம், 17/1, பிறவுண் வீதி, 2ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P. 0776660441. (49935)

### தவறிவிட்டது

மகேந்திரன் கவிதா என்பவருடைய தேசிய அ.அட்டை (857790995V) விசேட அ.அட்டை (0905013518) என்பன பண்டத்தரிப்புக்கும் யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டது. இதை கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: S.தம்பாப்பிள்ளை, முல்லையடி வீதி, பண்டத்தரிப்பு. (49914)

### தேவை

நல்ல ஆரோக்கியம் உள்ள ஒரு வயோதிபரை பராமரிக்கத் தக்க நடுத்தர வயதுடன் பெண் ஒருவர் தேவை. அவரைப் பற்றிய சுய விவரத்துடன் விண்ணப்பிக்கவும். C/o 2863 (சி/49120)


## தேவை

அப்பளத் தொழிற்சாலைக்கு முன் அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. தங்குமிடவசதி உண்டு.

தொடர்பு: ரதி அப்பளத் தொழிற்சாலை கோயில் சந்தை, கரவெட்டி.

(49803) (21.11.45)



## O/L DAY CLASS

**ஆரம்பம் 03-05-2006 புதன் (காலை 8மணி)**

மீண்டும் ஏமாற்றத்தைத் தவிர்த்த அச்சமற்ற அமைதியான சூழலில் அடிப்படையில் இருந்து கற்றிட விரைவில் எம்முடன் இணையுங்கள்.

**மது கல்வி நிறுவனம்**

டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

(49942)(26.11.45) -அதிபர்.


## வடமராட்சியிலும் டெங்கு ஒழிப்பு பிரசாரம்

வடமராட்சி,மே1

யாழ்.மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட டெங்கு ஒழிப்பு வாரம் வடமராட்சிப் பிரதேசத்திலும் கடைப்பிடிக்கப்பட்டது.

இதனையொட்டி பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினால் பாடசாலைகள் தோறும் டெங்கு விழிப்புணர்வுக் கல்வி போதிக்கப்பட்டது. சனசமூக நிலையங்கள் தோறும் சுற்றாடல் சூழல்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அத்துடன் ஒலிபெருக்கி மூலமும் பொதுமக்களுக்கு டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக விளக்கமளிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பமானது. நேற்று 30 ஆம் திகதி வரை இடம்பெற்றது. (ஐ-173)

## நினைவுச் சொற்பொழிவுகள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,மே1

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாக இருந்த நினைவுச் சொற்பொழிவுகள், சான்றோர் கௌரவிப்பு போன்ற நிகழ்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. தவிர்க்கமுடியாத காரணங்களால் இந்த நிகழ்ச்சிகள் திகதி குறிப்பிடாது ஒத்திவைக்கப்படுகின்றன என்று நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-14)

## மண்டபம் திறப்பு

யாழ்ப்பாணம்,மே1

நியாப் திட்டத்தின் கீழ் நயினாதீவு தெற்கு கிராமத்தில் அமைக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்தின் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ச.பரஞ்சோதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேசம் சிறப்பு விருந்தினர்களாக நியாப் திட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் க.பாலகிருஷ்ணன், வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் ஆகியோர் கலந்து கொள்வர். (202)

## மகா கும்பாபிஷேகங்கள்

வடமராட்சி,மே 1

புலோலி வாணர்குடியிருப்பு சொக்கன் கலட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 10 மணிவரையிலான சுபவேளையில் நடைபெறும்.

சுன்னாகம் கதிரைமலை சிவன் கோயில் பிரதம குரு முத்தமிழ்க் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஐ-173)

* * *

வடமராட்சி,மே 1

வடமராட்சி, துன்னாலை அருள்மிகு ஸ்ரீ மிந்திரன் கண்ணகை அம்மன் கோயில் ஜீர்ணோத்தர அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணிமுதல் 8மணிவரையிலான சுபவேளையில் நடைபெறும்.

கண்ணகை அம்மனுக்கும் பிள்ளையார், வைரவர் போன்ற ஏனைய பரிவார மூர்த்திகளுக்குமான கும்பாபிஷேகத்தை வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயில் பிரதம குரு க.புருசோத்தமக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். (ஐ-173)

## அலங்கார உற்சவம்

வடமராட்சி,மே1

தும்பளை, தம்புருவளை ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில் வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும். எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமையுடன் நிறைவுபெறும். (ஐ-173)


## விற்பனைக்கு

இந்தியாவிலிருந்து விசேடமாக வருவிக்கப்பட்ட

* பூப்புனித நீராட்டு விழாக்களுக்கும்

* திருமண வைபவங்களுக்குமான

மங்கலம் நிறைந்த, பற்பல டிசைன்களில் அழைப்பிதழ்களை எமது நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**சிறிகரன் புக் சென்ரர்**

ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.

(சி-49151) (54-11-45)


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

மலர்வு 19 - 11 - 1946



உதிர்வு 02 - 04 - 2006

### திருமதி சரஸ்வதி செல்வராசா

திதி: சதுர்த்தசி

அன்போடும் பண்போடும் ஆதரவாய் வாழ்ந்திருந்தீர்
நெஞ்சோடு உம்நினைவு நீத்தமும்
உறவாட வைத்துச் சென்றீரோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01-05-2006) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

108/9, கர்சேரி ... வீதி, நல்லூர். (49947)(26.11.45) கணவர், பிள்ளைகள், மருமக்கள்.

## தில்லையம்பதியான் துணை

**சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில்**

### நூதன விக்கிரக (உற்சவ மூர்த்தி) பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்



இன்று (01.05.2006) திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் தமிழ்நாடு கும்பகோணத்தில் உருவாக்கப்பட்ட ஸ்ரீ சிவகாமி அம்பாள் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறத்திருவருள் கூடியுள்ளது.

"தில்லையம் பதியாளே சிவகாமசுந்தரியே சரணம்"



தில்லையம்பதி - பரிபாலன சபை.

(49941) (24.18.45.11)

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 15 - 07 - 1938



உதிர்வு 27 -04 -2001

### திருமதி சபாரத்தினம் இராசாத்தியம்மா

திதி: சதுர்த்தி (01.05.2006)

ஐந்தாண்டுகள் ஆனதம்மா ஆசைமுகம் நாம் பார்த்து
அம்மாவை நினைக்கையிலே அன்பு முகம் தெரியுதம்மா!
என்றும் உங்கள் ஆத்மாசாந்திபெற
இறைவனை நாம் வேண்டுகின்றோம்.

65, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (49945)(26 மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 22 - 10 - 1989



உதிர்வு 30 - 04 - 2004

### செல்வி கிருஷ்ணமூர்த்தி டர்சனா

ஆண்டிரண்டு ஆனதுவோ அம்மா நீர் எமைப்பிரிந்து
ஆற்றாத் துயருடனே ஆற்றுகின்றோம் அமைதியின்றி
ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் மீண்டிடாரே
ஆறுதலைத் தந்திடவே பரமனிடம் வேண்டுகின்றோம்.

30, சின்னாலங்கண்டு லேன், அரியாலை, யாழ்ப்பாணம். (49946)(26.11.45) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



திருமதி

### துரைராஜா கௌரி (வவா)

(யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை)

தட்டாதெருவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமான திருமதி துரைராஜா கௌரி அவர்கள் நேற்று (30-04-2006) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை துரைராஜா (முன்னாள் அதிபர் நாவலர் பாடசாலை) அவர்களின் அன்பு மனைவியும் து.திவாகரன், து.சசிகரன் ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (30-04-2006) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.51/5, செட்டித்தெரு, நல்லூர்.

தொ.பே. இல. (இந்தியா):
091 4424514640
00919884540560
00919884431192

தகவல்: ஐ.செல்வரட்ணம் (மைத்துனர்).

(49944)(26.11.45)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# விடுதலை விரும்பிய மாமனிதர் சிவராம்

தமிழீழ மண்ணின் விடிவிற்காகவும் தமிழீழ மக்களின் விடுதலைக்காகவும் ஊடகங்கள் வாயிலாக உரிமைக்குரல் கொடுத்த பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் சிவராம் (தராக்கி) கருத்தைக் கருத்தால் வெல்லமுடியாத கோழைகளால் படுகொலைசெய்யப்பட்டு ஒருவருடம் நிறைவடைந்துள்ளது.

தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைக்காக - ஊடகங்கள் வாயிலாக - உரிமைக்குரல் கொடுத்த ஊடகவியலாளர் நால்வரை இழந்திருக்கிறோம். இந்த இழப்புகள் தமிழ் ஊடகத்துறைக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

யாழ்ப்பாணத்தில் மயில்வாகனம் நிமலராஜன், மட்டக்களப்பில் நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசன், கொழும்பில் மாமனிதர் தர்மரத்தினம் சிவராம் (தராக்கி), திருகோணமலையில் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் (எஸ்.எஸ்.ஆர்.) ஆகியோரை சிங்களப் பேரினவாதக் கோழைகளும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் தமிழ் விரோதக் குழுக்களும் படுகொலை செய்துள்ளார்கள்.

மறைந்த தமிழ் ஊடகவியலாளர்களில் வித்தியாசமான முறையில் மிளிர்ந்த மாமனிதர் சிவராம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதினம் நிறைவடைந்துள்ளது. இந்த வகையில் அவரின் ஊடகப்பயணத்தை ஒருமுறை நாம் மீட்டுப்பார்ப்போமாக.

1959ஆம் ஆண்டு ஆவணிமாதம் 11ஆம் திகதி மட்டக்களப்பில் தர்மரத்தினம் - மகேஸ்வரியம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த சிவராம், துணிச்சல் மிக்க ஊடகவியலாளர். எவ்வகையான நெருக்கடிச் சூழ்நிலையிலும் எதற்கும் அஞ்சாது துணிச்சலாக செய்திகளையும், விமர்சனங்களையும், கட்டுரைகளையும் முன்வைத்து வந்தவர்.

'தராக்கி' என எல்லோராலும் நேசமாக அழைக்கப்பட்ட சிவராம், சர்வதேசம் நன்கறிந்த சிறந்த தமிழ் ஊடகவியலாளர். கடந்த இரு தசாப்த காலத்தில் தனது ஊடகப்பணியினுடாக தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த முனைந்து உழைத்தவர்.

'தராக்கி' சிவராம், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் தலைமையை ஆதரித்தவர். தனது இறுதிக்கணம் வரையிலும் தமிழீழ விடுதலையை நெஞ்சார விரும்பி தனது சிந்தனையையும் எழுத்தையும் முன்வைத்தவர்.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி, சமாதான காலத்திலும் சரி இவர் எழுதிய கட்டுரைகள் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.

பேராதனைப் பல்கலைக்கழக பட்டதாரி மாணவனான சிவராம், தமிழிலும் ஆங்கிலத்திலும் கூடிய பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஆங்கில ஊடகங்கள் மூலம் சிங்கள மக்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் உண்மை நிலையைத் தெளிவுபடுத்தினார்.

ஆங்கிலப்பத்திரிகைகளில் 'தராக்கி' என்ற புனைபெயருடனும் தமிழ்ப்பத்திரிகைகளில் டி.சிவராம் என்ற சொந்தப்பெயருடனும் கட்டுரைகளை வரைந்தவர்.

சிவராமின் பத்திரிகை கட்டுரைகளை ஆய்வு செய்த வெள்ளையர் ஒருவர் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார். ஒரு தமிழ்ப் பத்திரிகையாளரின் கட்டுரைகள் கலாநிதி படிப்புக்கு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளதெனில் அது விடுதலை வேட்கை கொண்ட சிவராமின் கட்டுரைகளே.

இவர் சர்வதேச நாடுகளில் நடைபெற்ற மாநாடுகளில் பங்குபற்றி ஈழத்தமிழர் பிரச்சினைகளையும், தமிழீழ விடுதலைப் போரின் நியாயத்தன்மையையும் உலகறிந்து கொள்ள வைத்தவர்.

தற்கால கணினி உலகத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொண்ட சிவராம், தமிழநெற் இணையத்தளத்தினை நடத்திச் சென்றதுடன் அந்த இணையத்தளத்தின் பிரதான செய்தியாளராகவும் பணியாற்றியுள்ளார். இதனால் வடக்கு - கிழக்குச் செய்திகளை உலகுக்குப் பெற்றுக்கொடுப்பதில் முன்னணிச் சேவையொன்றை மேற்கொண்டார்.

இந்த நிலையில் சக ஊடகவியலாளரான நாட்டுப்பற்றாளர் நடேசனின் கொலையை அடுத்து 'தராக்கி' சிவராம் அவர்கள் கூறிய வார்த்தைகள் இங்கு நினைவுபடுத்தத்தக்கது. 'ஒரு நடேசனையோ அல்லது சிவராமையோ மண்டையில் போடுவதால் கொலையாளிகள் தமது எந்த இலக்கையும் அடைந்துவிடமுடியாது' என்றார். தனக்கு வரக்கூடிய ஆபத்தை ஏற்கனவே உணர்ந்து கூறிவந்தவர். ஆனாலும், தனது கருத்துக்களையோ, நிலைப்பாடுகளையோ தளர்வேதுமில்லாமல் இறுதி வரை உறுதியுடன் தொடர்ந்து வந்தவர்.

## - விடுதலை -

மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவராம், ஏற்கனவே பல தடவைகள் ஸ்ரீலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினரின் கொலைமிரட்டல்களை எதிர்நோக்கியவர். 2004ஆம் ஆண்டு மே மாதம் உலகப்பத்திரிகையாளர் தினமான 3ஆம் திகதி இவரது வீடு இலங்கைப் பொலீஸாரால் முற்றுகைக் குள்ளாக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கப்பட்டிருந்தது.

உயிருக்கு அச்சுறுத்தல் இருந்தும் தாயகத்திலேயே இருந்து பணியாற்ற அவர் விரும்பினார். தனது உயிருக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களையும், மிரட்டல்களையும் கவனத்தில் எடுக்காது வெளிப்படையாக நடமாடினார்.

தமிழிலும், ஆங்கிலத்திலும் ஈழத்தமிழர் தரப்பு நியாயங்கள் பற்றிய இவரது செய்திகள், விமர்சனங்கள், கட்டுரைகள் உலகுக்கு முரசறையச்செய்தன.

இந்த நிலையில் கருத்தைக்கருத்தால் வெல்லமுடியாத சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் கரங்கள் விடுதலை வேட்கை கொண்ட ஊடகவியலாளர் சிவராமின் குரல்வளையை - பேனாமுனையை துப்பாக்கிச்சன்னங்கள் கொண்டு அடக்க முற்பட்டது

உலகறிந்த ஊடகவியலாளரான 'தராக்கி' என்று அழைக்கப்படும் தர்மரத்தினம் சிவராம் இலங்கைத் தலைநகர் கொழும்பு - பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்தின் அருகாமையில் வைத்து இனம் தெரியாத நபர்கள் என்று சொல்லப்படுபவர்களால் 28.04.2005 அன்று இரவு 10.30 மணிக்கு சொகுசு ரக வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்ட பின்னர் நாடாளுமன்றக் கட்டடத்திற்குப்பின்னால் இலங்கை - ஜப்பான் நட்புறவுப்பாலத்திற்கருகே சடலமாகக் கிடந்தார். சிவராமைக் கடத்திச் சென்றவர்கள் அவரின் வாயை கைக்குட்டையொன்றினால் இறுக்கிக்கட்டியிருந்ததுடன் தலையில் துப்பாக்கியால் சுட்டிருந்தனர்.

இக்கொலையானது கொழும்பின் உயர் பாதுகாப்புப் பகுதியுள் நடைபெற்றது. எனவே, இக்கொலைக்கு ஸ்ரீலங்கா அரசும் அதன் படைகளுமே பொறுப்பாகின்றன.

ஊடகவியலாளர் தர்மரத்தினம் சிவராம் அவர்களின் இனப்பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது நற் பணியைக் கௌரவிக்கும் முகமாக 'மாமனிதர்' என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்குத் தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் வழங்கியுள்ளார்.

'தர்மரத்தினம் சிவராம் எளிமையும் நேர்மையும் பொருந்திய ஒரு தனித்துவமான மனிதர் நிறைந்த அறிவு படைத்தவர். எழுத்துத் துறையில் மிகுந்த விற்பன்னர், உலக அரங்கில் மிகவும் பிரபலமான பத்திரிகையாளர். இவருக்கு அறிமுகமே தேவையில்லை' என்று தமிழீழத்தேசியத்தலைவர் இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

எனவே, தமிழ் ஊடவியலாளர் அனைவரும் மாமனிதர் சிவராம் அவர்கள் காட்டிய பாதையில் சென்று அவர் விட்டுச் சென்ற இடத்திலிருந்து அந்தப் பணியை துணிவுடன் முன்னெடுப்போமாக.

விழவிழ இன்னும் வீறுகொண்டு எழுந்து நிற்கும் தமிழர்களைப் போல தமிழர்களின் ஊடகத்துறையும் அழிக்க அழிக்க இன்னும் விடுதலை வேட்கை கொண்டு எழுந்து நிற்கும் என்ற உண்மை நிலையை கருத்தைக் கருத்தால் வெல்லமுடியாத கோழைகளுக்குப் புரியவைப்போம்.





குடும்பப்புனர்வாழ்வு நிலையம் ஜெனீவா குளோபல் நிறுவனத்தின் நிதியுதவியுடன் போரினால் உறவை இழந்த 50 பெண்களுக்கு வருமான அதிகரிப்புக்கான நிதி வழங்கியது. இதற்கான நிகழ்வில் பங்கேற்ற பயனாளிகளை முதற் படத்திலும் உலக உணவுத்திட்டபணியக தலைமையதிகாரி லோறாபில், பயனாளி ஒரு வருக்கு உதவி நிதிவைப்பிலிடப்பட்ட சேமிப்புக் கணக்குப் புத்தகத்தை வழங்குவதை மற்றைய படத்திலும் காணலாம்.

## பிரான்பற்று உபதபாலகத்தை மீண்டும் இயக்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,மே 1

1983 ஆம் ஆண்டு முதல் செயற்படாதிருக்கும் பிரான்பற்று உபதபாலகத்தை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கம் வட பிராந்திய பிரதித் தபால் மா அதிபரை கடிதமூலம் கேட்டுள்ளது.

கடந்த வாரம் மேற்படி சங்கம் வட பிராந்திய பிரதி தபால் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

1983ஆம் ,1984ஆம் ஆண்டுகளில் யாழ்.மாவட்டத்தில் சில உப தபால் அலுவலகங்களில் கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்ற போது இந்த உப தபால் அலுவலகத்திலும் கொள்ளை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து மூடப்பட்ட இந்த உப தபால் அலுவலகம் இன்று வரை மீண்டும் திறக்கப்படவில்லை.

ஆனால், கொள்ளை இடம்பெற்ற ஏனைய உப தபாலகங்கள்யாவும் மீண்டும் திறக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன.

எனவே எமது கிராமத்தில் இந்த உப தபால் அலுவலகம் செயற்படாமையால் மாதாந்தஉதவிப்பணம் பெறுபவர்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அத்துடன் முத்திரை வாங்குதல் உட்பட மற்றும் தபால் தேவைகளுக்கும் மக்கள் தூரத்திலுள்ள பண்டத்தரிப்பு தபாலகத்திற்கே செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே தயவு கூர்ந்து இந்த உபதபாலகத்தை மீண்டும் திறந்து செயற்படுத்துவதற்கு ஆவன செய்யுமாறு தங்களை வேண்டுகிறேன் - என்று மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-135)

## பற்சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக இடம்மாற்றம்

வடமராட்சி, மே1

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவு, 'எக்ஸ்றே' பிரிவு இயங்கும் கட்டடத்திற்கு தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பகுதியுடன் இயங்கி வந்த பற்சிகிச்சைப் பிரிவு நவீன மயப்படுத்தப்படவுள்ளதால் அதற்கான வேலைகள் கடந்த இரு வாரங்களாக தொடர்ந்து நடைபெற்றுவருகின்றன. பல லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நவீன வசதிகளுடனான திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததும் மீண்டும் அதே இடத்தில் பற்சிகிச்சைப் பிரிவு செயற்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அது வரையில் பற்சிகிச்சை பெறுவோர் 'எக்ஸ்றே' பிரிவு கட்டடத்தில் தற்காலிகமாக செயற்பட்டுவரும் பற்சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## கரையோரப் பகுதிகளுக்கான குடிதண்ணீர் விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம்,மே.1

திருத்த வேலை காரணமாகத் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்.மாநகர சபைக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் நேற்றுக்காலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தில் இருந்து மடத்தடியிலுள்ள பிரதான நீர்த்தாங்கிக்குச் செல்லும் விநியோகக் குழாய்களில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது.

சேதமடைந்த குழாய்களைத் திருத்தும் பணிக்காகக் கடந்த புதன்கிழமை கொழும்புத்துறை தொடக்கம் நாவாந்துறை வரையான பிரதேசத்துக்கான குடிதண்ணீர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

குழாய்கள் திருத்தும் பணி முடிவடைந்ததையடுத்து நேற்றுக் காலை தொடக்கம் விநியோகம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

இலுப்பையடிச் சந்தியில் நீர்க்குழாய் திருத்தத்திற்காக தோண்டப்பட்ட குழிகள் இன்னும் மூடப்படவில்லை.

இதனை மூடும் பணி நாளை செவ்வாய்க்கிழமையே நடைபெறும் என்றும்-

அதுவரை அந்த வீதி போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டிருக்கும் என்றும் -யாழ்.மாநகர சபை குடி தண்ணீர் விநியோகப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (எ-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது 3 நாள் பயிற்சியாட்டம்

# லசித் மலிங்க, முரளியின் பந்து வீச்சில் சுருண்டது இங்கிலாந்து பிராந்திய அணி

லண்டன்,மே 1

முரளி மற்றும் மலிங்கவின் சிறப்பான பந்து வீச்சால் இங்கிலாந்து டெர்பிஸியர் பிராந்திய அணி 219 ஓட்டங்களுக்குச் சகலவிக்கெட்டுகளையும் இழந்தது. இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கையணி, அங்கு பிராந்திய அணியுடன் 3 நாள்களைக் கொண்ட ஒரு பயிற்சியாட்டத்தில் விளையாடி வருகின்றது.

நேற்றுமுன்தினம் ஆரம்பித்த இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பிராந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 88 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை இழந்த அவ்அணி, முரளி மற்றும் மலிங்க ஆகியோரின் சிறப்பான பந்துவீச்சால் மேலும் 55 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் ஏழு விக்கெட்டுக்களை இழந்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் மதியபோசன இடைவேளைக்கு முன்பு இணைப்பாட்டமாக 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். ஆனால் அதன் பின்பு லசித் மலிங்க தனது சிறப்பான பந்து வீச்சால் அடுத்தடுத்து மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்ற இங்கிலாந்து பிராந்திய அணி இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டது. இருந்தாலும் 9 ஆவது விக்கெட்டுகாக ஜோடி சேர்ந்த அன்டி கிளே(29) மற்றும் ரோம் லங்லே (27) ஆகியோரின் ஓரளவு சிறப்பான துடுப்பாட்டம் 200 ஓட்டங்களைக் கடக்க உதவியது.

இலங்கையணியின் பந்து வீச்சாளர்கள் இங்கிலாந்து பிராந்திய அணிக்காக 44 உதிரி ஓட்டங்களை அள்ளி வழங்கியுள்ளனர். மலிங்க தனது முதல் ஐந்து ஓவர்களில் ஏழு முறையற்ற பந்து வீச்சுகளை வீசினார்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய ரெய்லர் 34 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மலிங்கவின் பந்து வீச்சில் "போல்ட்" முறையில் ஆட்டமிழந்தார். அடுத்ததாகக் களமிறங்கிய ரவிஸ் போர்ட் நான்கு ஓட்டங்களைப் பெற்றிருந்தவேளை மலிங்கவின் பந்து வீச்சில் "ஸ்லிப்" திசையில் நின்ற டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை இழந்து சொற்ப நேரத்துக்குள்ளேயே ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக களமிறங்கி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்த ஸரம்பிங்ஸ் (44), மலிங்கவின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த வீரர்களை முரளி தனது கைவரிசையை காட்டி சொற்ப ஓட்டங்களுடன் ஆடுகளத்தை விட்டு வெளியேற்றினார். இறுதியில் இங்கிலாந்து பிராந்திய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 219 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் இலங்கையணி சார்பாக மலிங்க மற்றும் முரளி ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி மூன்று ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தரங்க (3), வன்டோட்(0) ஆகியோர் களத்தில் உள்ளனர்.

# தென்னாபிரிக்காவுடனான 2ஆவது டெஸ்ட்: நியூஸிலாந்து அணி வலுவான நிலையில்

## பிளமிங் இரட்டைச்சதம், பிராங்களின் கன்னிச் சதம்

கேப்டவுண்,மே 1

ஸ்ரீபன் பிளமிங்கின் 262 ஓட்டங்களுடனும் வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்ளினின் கன்னிச் சதத்துடனும் தென்னாபிரிக்காவிற்கு எதிராக கேப்டவுனில் இடம் பெற்றுவரும் இரண்டாவது டெஸ்டில் நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 593 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

தொடர்ந்து பதிலளித்து ஆடிவரும் தென்னாபிரிக்கா மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவின்போது 2 விக்கெட்டுகளை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அணித்தலைவர் சிமித் 25 ஓட்டங்களுடன் ஜிற்றன் பட்டேலின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து டிப்பென்னர் 47 ஓட்டங்களுடன் பட்டேலின் பந்தில் 'போல்ட்' ஆனார்.

முன்னதாக இரண்டாம் நாள் ஆட்டத்தை 6 விக்கெட் இழப்பிற்கு 265 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்த நியூஸிலாந்து ஆரம்பத்திலேயே டானியல் விக்டோறியின்(11) விக்கெட்டைப் பறிகொடுத்தது. தொடர்ந்து களம் புகுந்த ஜேம்ஸ் பிராங்ளின் மறுமுனையில் நின்ற ஸ்ரீபன் பிளமிங்குடன் சேர்ந்து நிதானமாக ஓட்டங்களைக் குவித்தார்.

எட்டாவது விக்கெட்டில் இவர்கள் இருவரும் 71 ஓவர்கள் துடுப்பெடுத்தாடி 256 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். இவ் இணைப்பாட்டம் நியூஸிலாந்து அணி சார்பாகப் புதிய சாதனையாகும்.

தென்னாபிரிக்காவின் பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்த பிளமிங் 262 ஓட்டங்களைப் பெற்றதோடு தனது மூன்றாவது இரட்டைச் சதத்தைப் பூர்த்திசெய்தார். கடைசியாக அவர் பிரின்ஸின் பந்தில் 'போல்ட்' ஆக இரண்டாம் நாள் ஆட்டம் போதிய வெளிச்சமின்மை காரணமாக முடிவிற்கு வந்தது. மறுமுனையில் ஜேம்ஸ் பிராங்ளின் ஆட்டமிழக்காமல் 93 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தொடர்ந்து மூன்றாம் நாள் ஆட்டத்தை 535 ஓட்டங்களிற்கு 8 விக்கெட்டுகள் என்ற நிலையில் ஆரம்பித்தது நியூஸிலாந்து. சிறப்பாக ஆடிய பிராங்ளின் தனது கன்னிச் சதத்தைப் பூர்த்தி செய்தார். இந்நிலையில் 8 விக்கெட்டுகள் இழப்பிற்கு 593 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது ஆட்டத்தை இடைநிறுத்தியது நியூஸிலாந்து. பிராங்ளின் 122 ஓட்டங்களுடனும் பட்டேல் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலிருந்தனர்.

தனது முதலாவது இன்னிங்ஸை ஆடிய தென்னாபிரிக்க அணி நிதானமாக ஆட்டத்தைத் தொடர்ந்தது. இதனால் நியூஸிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர்களால் விக்கெட்டுகளை வீழ்த்த முடியவில்லை. தனது முதல் டெஸ்டில் விளையாடும் 'ஓப்- ஸ்பின்னர்' ஜீற்றன் பட்டேல் தனது கைவரிசையைக் காட்டி தென்னாபிரிக்காவின் இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

போதிய வெளிச்சமின்மை காரணமாக 30 ஓவர்கள் வீசப்படாத நிலையில் மூன்றாம் நாள் ஆட்டம் முடிவிற்கு வந்தது. களத்தில் ஹசீம் அம்லா 50 ஓட்டங்களுடனும் கலிஸ், 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

மேசமான துடுப்பாட்டத்தால் ஹசீம் அம்லா கடந்த 16 மாத காலமாக நியூஸிலாந்து அணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிம்பாப்வேயுடனான முதல் ஒருநாள் ஆட்டம்; மேற்கிந்தியத்தீவுகள் 5 விக்கெட்டுகளால் வெற்றி

பிரையன் லாரா ஆட்டமிழக்காமல் பெற்ற 40 ஓட்டங்களின் உதவியுடன் சிம்பாப்வேயிற்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவுகள் 5 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ஏழு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ளது சிம்பாப்வே அணி. இத்தொடரின் முதல் ஆட்டம் சென்ஜோன்ஸில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் ஆடிய சிம்பாப்வே அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 151 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிபாண்டா 99 பந்துகளில் 55 ஓட்டங்களை விளாசினார். சிம்பாப்வே அணி கடைசி 6 விக்கெட்டுகளையும் 30 ஓட்டங்களிற்குள் இழந்தமையால் கூடுதலான ஓட்டங்களைக் குவிக்க முடியாமல் போனது.

152 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கைத் துரத்த ஆரம்பித்த மேற்கிந்தியத்தீவுகள் அணி 77 ஓட்டங்களைப் பெறுவதற்கிடையில் முக்கிய நான்கு விக்கெட்டுகளை இழந்தது. அதன் பின்னர் ஜோடி சேர்ந்த அணித்தலைவர் லாரா மற்றும் விக்கெட் காப்பாளர் ராம்டீன் ஆகியோர் அணியை வெற்றி நோக்கி வழிப்படுத்தினர்.

ராம்டீன் 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்த லாரா 'லோங்- ஓன்' திசையில் சிக்ஸர் ஒன்றை விளாசி அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தார்.

# நலன்புரி நிலையங்களுக்கு மலசலகூடங்கள்

குடத்தனை,மே 1

ஏ.சி.ரி. நிறுவனத்தின் நிதியுதவியுடன் தேசிய கிறிஸ்தவ மன்றத்தினூடாக யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தினால் குடத்தனை கிழக்கு மாளிகைத்திடல் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்களுக்கு 54 மலசல கூடங்கள் கட்டப்பட்டு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இந்த மலசல கூடங்களை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நலன்புரி நிலையத்தில் மேலும் 10 மலசல கூடங்கள் அமைக்கவுள்ளன. இவ்வாறு யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் குடத்தனை பிரதேசத் திட்ட உதவியாளர் த.பார்த்தீபன் தெரிவித்தார். (ஓ-78)

# குடும்பஸ்தருக்கு கத்திவெட்டு!

குடத்தனை,மே1

கத்திவெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் வட்டுக்கோட்டை முதலி கோயிலடியைச் சேர்ந்த ச.நாகரத்தினம் (வயது-52) என்பவரே கத்திவெட்டுக்கு இலக்கானவராவார். (ஓ-78-13)

ராஜா யாழ்ப்பாணம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
பரத், மல்லிகா சுபூர் நடித்த
அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
10.30,2.30,6.30,9.30 ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்
ரஜனி, அம்பிகா, சிவாஜி நடித்த
படிக்காதவன்
காட்சி நேரம்: 10.30, 2.30, 5.30
2 ஆம் திகதி முதல் கன்[illegible]னின் காதலி

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
பிரபு, நவ்யாநாயர், முரளி, வடிவேலு நடித்த
பாசக்கிளிகள்
... 10.30, 2.30, 6.30, 9.30

# திருமலையில் பாதிப்படைந்தோருக்கு ஐ.நா. தொண்டு அமைப்புகள் உதவி

திருமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள்மீது அரச படைகள் நடத்திய தாக்குதல்களால் இதுவரை சுமார் 21 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்திருக்கின்றனர் என்று கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் மனிதநேய தொடர்பாடல் அலுவலகம் நேற்றுத் தெரிவித்திருக்கிறது.

இலங்கை விமானப் படையினரின் குண்டுவீச்சினால் அரச கட்டுப்பாடற்ற பகுதிகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஐக்கிய நாடுகளின் தொண்டு அமைப்புகள் பலவும் நிவாரணங்களை வழங்கி வருகின்றன என்று ஐ.நா. மனிதநேய தொடர்பாடல் அலுவலகம் நேற்று கொழும்பில் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் ஆறாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 21 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் -

அங்கு உடனடி நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் - அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
18 . 11 . 1936



ஆண்டவன் அடியில்
05 . 05 . 2003

சிவத்தமிழ் மணி

**அமரர் மாப்பாணர் துரைராசா**

**(முன்னாள் எழுதுவினைஞர், சா/நகரசபை, தென்மராட்சி ஓய்வூதிய சங்கச் செயலாளர்)**

*திதி: 01.05.2006 (சித்திரைச் சதுர்த்தி)*

அன்பாலே அரவணைத்து அறிவாலே வழிகாட்டி
பாசமுடன் எமை வளர்த்து பார்புகழ வைத்தவரே
மூன்றாண்டுகள் ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்.

**கலையாத நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.**

*மீசாலை (வசாவிளான்).* (49951)(25-34-49) **- குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### பரமசாமி தெட்சணாமூர்த்தி

தங்கோடை, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி தெட்சணாமூர்த்தி அவர்கள் நேற்று (30-04-2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் தவராணி, யோகராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் நகுலேஸ்வரன், ரங்கநாதன் ஆகியோரின் மாமனும் கஜேந்திரன், சிறிதேவி, நந்தினி, த்யாபரன், துவாரகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில், அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தங்கோடை,* தகவல்:
*காரைநகர்.* (49948) (24-34-49) **மனைவி, பிள்ளைகள்.**

### திருமதி சீவரத்தினம் காசியர்

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட, திருமதி சீவரத்தினம் காசியர் அவர்கள் 29.04.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற குமாரசாமி காசியர் (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும் விக்னேஸ்வரன், திருமதி சி.பரமேஸ்வரி (கொழும்பு), ஜீவதாசன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவபாலகணேசன் (ஓய்வு பெற்ற பிரதி பொதுமுகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி), திருமதி ஜீ.புஸ்பலீலாவதி (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் சிவஞானம் (ஓய்வுபெற்ற சிறாப்பர், திறைசேரி), திருமதி சிவபூரணம் செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் ஜாகரன் (பொறியியலாளர்), யாழினீஸ்வரி, சிவவல்லி, தங்காகரன், ஜீவராஜ் (சுவிஸ்), அஜிராஜ் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதிப்பிள்ளை வீதி,* (49949) (24-34-49) தகவல்:
*உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* **கா.விக்னேஸ்வரன் (மகன்).**

### தம்பிஐயா சிவபுண்ணியம்

**(ஆயுள்வேத வைத்தியர் ADM)**

29.04.2006 சனிக்கிழமை சிவபதமடைந்த தம்பிஐயா சிவபுண்ணியம் அவர்களின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"தேவஸ்தான்"*
*சுண்டுவில் ஒழுங்கை,* தகவல்:
*சாவகச்சேரி.* (சி-49158) (24-34-49) **பரமேஸ்வரி (மனைவி).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்பூர் குண்டுத் தாக்குதல் சேதம்

# இலங்கை வெளிவிவகார அமைச்சருக்கு முன் பிரிட்டிஷ் அமைச்சருக்கு விவரம் தெரிந்தது!

கொழும்பு,மே 1

சம்பூர் கிராமத்தின் மீது சரமாரியான குண்டுத் தாக்குதல்களைக் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்திய இலங்கை விமானப் படையின் இஸ்ரேலியத் தயாரிப்பு 'கிபிர்' யுத்த விமானங்கள் இரண்டும் தாக்குதலை முடித்துக்கொண்டு கட்டுநாயக்கவிலுள்ள தமது தளத்துக்குத் திரும்புவதற்கிடையில் அந்த விமானத் தாக்குதல் தொடர்பான பாதிப்புகள் குறித்து பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் ஜாக் ஸ்ட்ரோ இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுடன் தொடர்புகொண்டு பிரிட்டிஷ் அரசின் கவலையைத் தெரியப்படுத்தினார் எனச் செய்திகள் கூறுகின்றன. பிரிட்டிஷ் அரசின் இந்தச் செயல், மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் விஷயத்தில் இலங்கை அரசு உதாசீனமாக இருந்து விட முடியாது என்பதையே எடுத்துக் காட்டுவதாக இருக்கிறது என்று மனித உரிமைகள் பாதுகாப்பு ஆர்வலர் பலரும் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குப் பதிலடித் தாக்குதலைத் தொடுக்க ஜனாதிபதி முப்படைத் தளபதிகளுடன் ஆலோசனை நடத்திய செய்தியை மட்டுமே அறிந்திருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு இந்த சம்பூர் மீதான விமானக் குண்டு வீச்சுகள் பற்றிய தகவலும், சிவிலியன்களுக்கு ஏற்பட்ட சேதவிவரங்களை பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் தமக்குத் தெரியாத விவரங்களை விசாரித்தமையும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கும். ஆனாலும், அவர் பிடிகொடுக்காமல் முழு விவரங்களும் தமக்குச் சரியாகக் கிடைக்கவில்லை எனவும் விவரங்கள் பூரணமாகக் கிடைத்ததும் தொடர்பு கொள்வார் எனவும் என்று கூறி நிலைமையைச் சமாளித்திருக்கிறார்.

இதில் விசேடம் என்னவென்றால், கொழும்பிலிருந்து சுமார் ஒரு இருநூறு, முந்நூறு கிலோமீற்றர் தொலைவிலுள்ள நாட்டின் ஒரு பகுதியில் நடந்த விமானக் குண்டுத் தாக்குதல் பற்றிய தகவல்கள், விவரங்கள் இலங்கை வெளிவிவகார அமைச்சருக்குத் தெரியுமுன்னரே எத்தனையோ ஆயிரம் கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள வேற்று நாட்டு அமைச்சருக்கு முன்கூட்டியே கிடைத்திருப்பதாகும்.

**இந்தியப்பிரதமர்**

இதேநேரம், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் இந்த விமானக் குண்டுத் தாக்குதல்கள் பற்றிக் கேட்டறிந்து சிவிலியன் பாதுகாப்பு விடயங்களின் அவசியத்தையும் வலியுறுத்தியிருக்கிறார்.

இலங்கையின் இறைமைக்கும், ஆட்புல ஒருமைப்பாட்டுக்கும் இந்தியா எப்பொழுதும் பாதுகாவலனாக இருந்து வரும் என்றும் இந்தியப் பிரதமர் தொலைபேசி மூலம் இலங்கை ஜனாதிபதியுடன் கூறியிருக்கிறார்.

கடல் வழியாகப் புலிகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதைத் தடுக்க இந்தியக் கடற்படை உதவ வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியப் பிரதமரிடம் அப்போது கேட்டுக் கொண்டார் எனவும் தெரிகிறது. (க)

## 4 தமிழ் இளைஞர்கள் திருமலையில் வெட்டிக்கொலை!

திருகோணமலை,மே1

திருகோணமலை விளாங்குளம் காட்டினுள் இருந்து தமிழ் இளைஞர்கள் நான்கு பேரின் சடலங்கள் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளன.

சப்பற்றுறையைச் சேர்ந்த இந்த நான்கு இளைஞர்களினது சடலங்களும் வாள்வெட்டுக் காயங்களுடன் காணப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்ட இளைஞர்களில் குமார் என்பவர் திருகோணமலை நகர சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் தொழில் புரிந்து வந்தவரென்று கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் பற்றிய முழுமையான விவரங்கள் உடனடியாக வெளிவரவில்லை. ஆனாலும், படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் இவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்று சில தகவல்கள் தெரிவித்தன.

திருகோணமலைப் பொலீஸார் இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்திவருகின்றனர். (க)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரண்டு வாகனங்களையும் மீட்டு வரமுடியாததால் அங்கேயே அவற்றைத் தாங்கள் தாக்கியழித்து விட்டு வந்தனர் என்று நேற்றைய தாக்குதலில் ஈடுபட்ட புலிகளின் கொமாண்டோ அணியினரை மேற்கோள்காட்டி புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடத்தப்பட்ட புனர்வாழ்வுக் கழகப் பணியாளர்கள் 10 பேரில் மூவர் விடுவிக்கப் பட்டமையும் ஏனைய 7 பேர் குறித்த தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை என்பதும் தெரிந்தவையே. (க)

## எல்லாளன் படை உரிமை கோரியது

கொழும்பு,மே 1

யாழ்.பஸ் நிலையத்தில் நேற்றுச் சுட்டுக் கொல்லப்பட்ட ஜோசப் பிரகாஸின் கொலைக்கு உரிமை கோரி யாழ்.மாவட்ட எல்லாளன் படை செய்திக் குறிப்பொன்றை நேற்றிரவு ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ளது.

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எமது படகுகளை நோக்கி தாக்குதல் நடத்தப்பட்டது.

கடற்படையினரின் கடற்படைப் படகுகள் மீதும் கரையில் இருந்த சிறிலங்கா இராணு முகாம்கள் மீதும் எமது படகுகளில் இருந்த போராளிகள் பதில் தாக்குதலை நடத்திய பின் தமது பயணத்தைத் தொடர்ந்தனர்.

திருகோணமலையை சென்றடைந்த எமது படகுகள் அங்கிருந்த எமது போராளிகளை ஏற்றிக்கொண்டு முல்லைத்தீவு நோக்கிப் புறப்பட்டன. நடந்ததை தெரிந்துகொண்ட கடற் படையினர் தாக்குதலை நிறுத்திவிட்டு எமது படகுகளுக்கு பாதுகாப்பு வழங்கியவாறு பின் தொடர்ந்தனர்.

தமது முகாம்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் வரை கடற்படைப் படகுகள் வழித்துணை வழங்கியிருந்தன. போராளிகளை ஏற்றிக்கொண்டு வந்த எமது படகுகள் இரவு 10.30 மணியளவில் தளம் திரும்பின. - என்றுள்ளது. (22)

## அல்லைப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எறிகணைகள் ஏவப்பட்ட சத்தங்கள் கேட்டன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிப் பகுதியை நோக்கி இந்த எறிகணைகள் ஏவப்பட்டன என்று ஒரு தகவல் தெரிவித்தது.

எனினும், கடலில் சந்தேகத்திற்கிடமான முறையில் படகு ஒன்று நடமாடியதை கடற்படையினர் அவதானித்தனர் எனவும் - அதன் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது.

இந்த எறிகணை வீச்சால் ஏற்பட்ட சேத விவரங்கள் தெரியவரவில்லை. (ஒ-13)

## ஜி.சீ.ஈ. சாதாரண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மகேந்திரன், அபர்னா ஜெகநாதன், நிரோசி கந்தசாமி, தனுசியா திருபுவனேஸ்வரன், ரம்மியா சிவராஜசுந்தரம், தர்சிகா பாஸ்கரன், கார்த்திகா அமிர்தலிங்கம், வாணிசிறி செல்வகணேசபிள்ளை, காஜத்திரி தனபாலசிங்கம், யசோதரா பேரின்பநாதன், லக்ஸ்சாஜினி பரிபூரனானந்தன், சர்மிலா சிட்னேஸ்வரன், தர்சினி உருத்திரகோடீஸ்வரன், பவித்திரா கமலநாதன்.

**யாழ்.இந்துக் கல்லூரி**

முருகதாசன் பார்த்தீபன், சத்தியசீலன் செந்தில்குமரன், சரவணப்பெருமாள் பரனீதரன், சுந்தராஜா லிசாகன், பரமநாதன் நிரோசன்.

**சாவகச்சேரி இந்துக் கல்லூரி**

இரஜிக்காந் பரிமளராஜா, சச்சிதானந்தம் சுவர்னா.

யாழ். இந்து மகளிர் கல்லூரி :

இஸ்வரஜனனி கருணைலிங்கம், சிறிவள்ளி சிவலிங்கம்.

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

இரட்ணகுமார் கோபிநாத், டல்சினி கிருபாநந்தன்.

**கிளிநொச்சி மகாவித்தியாலயம்**

பாலச்சந்திரன் தனதீபன், மகேஸ்வரன் ரஜீதன், அமிர்தலிங்கம் அனுருத்தன்.

**புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி**

தவராசா இளங்கோ, தாட்சாயினி சிவலிங்கம், டக்சியா வேலாயுதம், அனுஜா யோகநாதன்.

**யாழ். மெதடிஸ் கல்லூரி.**

குணச்சந்திரன் தர்சினி, சக்திவேல் கார்த்திகா, சிவசுவாமி வாகினி, பிரான்சிஸ் மதுஜா, வல்லிபுரம் கிருஸ்ஞானந்தி.

**வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி**

யோகராசா கேசவன், துளசிகா செல்வராஜா, சத்தியா கதிர்காமநாதன், கேமச்சந்திரன் பரமேஸ்வரன். (ஒ-13)

## பாதுகாப்புக் கெடுபிடியின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இதில் யாழ். குருநகர் தண்ணீர் தாங்கியடியைச் சேர்ந்த ஜோசப் பிரகாஸ் என்ற 21 வயதான இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்று நீதிவான் விசாரணைகளின் போது படையினர் தெரிவித்தனர்.

உயிரிழந்த பிரகாஸ் ஒரு பிள்ளையின் தந்தை என்று அவரது உறவினர்கள் கூறினர். இவர் ஏன் சுடப்பட்டார் என்பதற்கான காரணங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

சூட்டுச் சத்தம் கேட்டு சுதாகரித்த படையினர் தாக்குதலாளிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

படையினர் சுட்டதை அடுத்து, தாக்குதலாளிகள் நகரிலுள்ள ஜும்மா பள்ளிவாசல் வீதியூடாகத் தப்பிச் செல்ல எத்தனித்துள்ளனர். அப்போது அவர்களது மோட்டார் சைக்கிள் சுவரில் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளது. உடனடியாக அதனைக் கைவிட்டு அவர்கள் தப்பிச் சென்று விட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். மோட்டார் சைக்கிள் கிடந்த இடத்தில் இருந்து ஒரு கிரனேட்டைத்தாம் கண்டெடுத்துள்ளனர் என்றும் அவர்கள் கூறினர்.

கைவிடப்பட்ட நிலையில் கிடந்த மோட்டார் சைக்கிளில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. பள்ளிவாசலின் படிகள், ஜன்னல்கள் என்பவற்றிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

குறிப்பிட்ட இடத்திற்கு வந்த யாழ்.மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் விசாரணைகளை மேற்கொண்டார். தாக்குதலாளிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் எனக் கூறப்பட்ட இராணுவத்தினரும் சம்பவ இடத்தில் வைத்தே விசாரிக்கப்பட்டனர்.

நாட்டில் அசாதாரண நிலைமை ஏற்பட்டதை அடுத்து யாழ். நகரப் பகுதியின் பாதுகாப்பு மிகத் தீவிரமாக்கப்பட்டிருந்தது. படையினர் குவிக்கப்பட்டு கட்டுப்பாடுகள் இறுக்கமாக்கப்பட்டிருந்தன. அப்படியிருக்கையிலும் ஆயுதங்களுடன் நகரின் மையம் வரை ஊடுருவிய இருவர் இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். (ம-86-190)

## வெலிகந்தையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டி.எல்.எவ். அணியினர் மற்றும் குழுக்களின் பிரமுகர்களும் அங்கு வந்திருந்தனர் என்றும் -

இந்த நேரம் பார்த்தே புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர் என்றும் கூறப்பட்டது.

எனவே, இறந்தவர்களில் கருணா அணி, ஈ.என்.டி.எல்.எவ். போன்றவற்றின் பிரமுகர்களுடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர்களும் அடங்கியிருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பானுவின் நேரடி நெறிப்படுத்தலில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் ஆரம்பிக்கப் பட்ட இத்தாக்குதல் சுமார் ஒரு மணிநேரம் நீடித்துள்ளது.

இதன்போது, அந்த முகாமிலிருந்த அனைத்து ஆயுதங்களும் விடுதலைப் புலிக் கொமாண்டோக்களால் அழிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளின் கொமாண்டோ ஒருவர் காயமடைந்துள்ளார் எனப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் கொமாண்டோக்கள் இந்த முகாம் மீது தாக்குதலை நடத்திக் கொண்டிருந்த வேளை அரச படையினர் அவர்களை நோக்கி ஆட்லறித் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று புலிகள் கூறுகின்றனர்.

ஆனால், இராணுவம் அதை அடியோடு மறுத்துள்ளது.

"அந்தப் பிரதேசம் அரசுப் படைகளினது கட்டுப்பாட்டிலா அல்லது புலிகளின் கட்டுப்பாட்டிலா உள்ளது என்பதில் குழப்பம் இருக்கிறது. தெளிவில்லை. அங்கு புலிகளுக்கும், கருணா குழுவுக்கும் மோதல் நிகழ்ந்ததாக மட்டுமே நாம் அறிவோம். அதில் கருணா குழுவினர் காயமடைந்தனர் என்பதை நாம் உறுதிப்படுத்த முடியும்." - என அரச இராணுவத் தரப்பின் உயரதிகாரி ஒருவர் செய்தி ஏஜென்ஸிகளுக்குத் தகவல் வெளியிட்டுள்ளார்.

காயமடைந்த கருணா குழுவினர் பத்துப் பேர் அரச துருப்புகளினால் மீட்கப்பட்டு முதலில் வெலிகந்தை வைத்தியசாலையிலும் பின்னர் பொலனறுவை மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களின் நிலைமை மோசமடையவே அவர்களை உடன் கொழும்புக்கு மாற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

மேற்படி தாக்குதலை நடத்திய புலிகளின் ஊடுருவல் அணியினர் வெற்றிகரமாகத் தமது நிலைகளுக்குத் திரும்பி விட்டனர் என வன்னிச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை -

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கருணா குழுவினால் கடத்திச் செல்லப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த புலிக்குட்டி என்று அழைக்கப்படுகின்ற வர்த்தகர் இந்த முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் என்றும், அவரையும் புலிகள் பத்திரமாக மீட்டு வந்தனர் என்றும் கிளிநொச்சியிலுள்ள புலிகளின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். (க)


விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி-யாழ்.
O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)
பிரிவு 2
O/L DAY CLASS
ஆரம்பம் 03.05.2006 8.30
(8.30-2.30)
* இவ்வருடம் 6 பிரிவுகள் மட்டுமே
* பிரிவு 3 மிக விரைவில்.
* பிரிவு 2 இற்கான அனுமதிகள் 02.05.2006 ஆம் திகதிக்குமுன் பெற்றுக் கொள்ளவும்.
* கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுடன் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படும் ஒரே நிறுவனம்.
* தூர இடத்து மாணவர்களுக்கு விடுதி வசதிகள் உண்டு.

15 வருட சேவை
ஏரியன் அக்கடமி
கேணியடி, கொக்குவில் மேற்கு.
O/L DAY CLASS
ஆரம்பம் : 03.05.06
புதன் காலை 9 மணி.

O/L DAY CLASS
பிரிவு - 1
ஆரம்பம் : 03.05.06 புதன் 8.30-2.30
★ யாழ். மாவட்டத்திலே O/L வகுப்புகளுக்கு தன்னிகரில்லாத ஒரே நிறுவனம்.
★ கடந்த வருடத்தில் அதிகமாணவர்களை சித்தியடைய வைத்த ஒரே நிறுவனம்.
நாவலர் இன்ஸ்ரிரியூட்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஐடியல் அக்கடமி
சீரணி சந்தி, சண்டிலிப்பாய். — நீராவியடி, யாழ்ப்பாணம்.
மாணவர்களே! ஒரு தடவை தவறிவிட்டீர்களா? கவலை வேண்டாம் எம்மோடு இணையுங்கள் வெற்றி நிச்சயம்.
எமது இரு நிறுவனங்களிலும் அனைத்துப் பாடங்களும் ஒரே நாளில்
O/L DAY CLASS
ஆரம்பம் : 03.05.06 காலை 8 மணி
கணிதம் - V.N. பத்மநாதன்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) நிறு[illegible] 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.05.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை,

௨006 மே

வெளியீடு 02

## மாதிரி வினாப்பத்திரம்

### கணக்கீடு - II

திரு. S.கொலின். B.B.A.-திருகோணமலை.

(கணக்கீடு - II, பகுதி - I இன் வினாக்கள் இங்கு பிரசுரமாகின்றன.)

## பகுதி -I

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

1. கம்பனி ஒன்றில் பங்குவட்டம் பின்வரும் எந்தத் தேவைக்குப் பயன்படுத்த முடியாது?
   1) உபகார பங்கு வழங்கலுக்கு
   2) மீட்பு வட்டம் பதிவழிக்கப்படுவதற்கு
   3) பங்குக் கழிவு பதிவழித்தலுக்கு
   4) மூலதனக் குறைப்பிற்கு
   5) பங்கிலாபம் வழங்குவதற்கு
2. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 5 இற்கு அமைய இருப்புகள் எனப்படுபவை?
   1) மூலப்பொருள், எழுதுபொருள், முடிவுப்பொருள்
   2) எழுதுபொருள், பொதிகட்டும்பொருள், நேரில்மூலப்பொருள்
   3) மூலப்பொருள், முடிவுப்பொருள், குறைவேலை
   4) முடிவுப்பொருள், குறைவேலை, பொதிகட்டும்பொருள்
   5) மேற்கூறிய எவையும் அல்ல.
3. இலங்கைக் கணக்கிடல் நியமம் 5 இன்படி வரலாற்றுக் கிரயத்தின் பகுதிகள் எவை?
   1) கொள்வனவுக் கிரயம் + மாற்றல் கிரயம் + கொண்டு வருவதற்கான கிரயம்
   2) நேர்க் கிரயம் + நேரில் கிரயம்
   3) உற்பத்திக் கிரயம் + நேரில் கிரயம்
   4) உற்பத்தி மேந்தலை + நிலைய நிர்வாக மேந்தலை + விற்பனை விநியோக மேந்தலை
   5) மூலக்கிரயம் + தொழிற்சாலைக் கிரயம்
4. நேர்க்கிரயங்களின் பகுதிகள் எவை?
   1) மூலக்கிரயம் + மேந்தலைக் கிரயம்
   2) உற்பத்தி மேந்தலை + நிர்வாக மேந்தலை + விற்பனை மேந்தலை
   3) மூலப்பொருள் + கூலி + ஏனைய நேர்க் கிரயங்கள்.
   4) உற்பத்திக் கிரயம் + உற்பத்தியில்லாத கிரயம்
   5) மூலக்கிரயம் + உற்பத்திக் கிரயம் + மேந்தலைக் கிரயம்
5. பின்வருவனவற்றில் மூலதன ஒதுக்கங்களின் தொகுப்பு எது?
   1) பங்குவட்டம், பொது ஒதுக்கம், சொத்து மதிப்பீட்டு இலாபம்
   2) பொது ஒதுக்கம், பகிரப்படாத இலாபம், பங்குவட்டம்
   3) சாதாரண பங்கு, முன்னுரிமை பங்கு, பங்குவட்டம்
   4) பங்குவட்டம், முன்னுரிமைப்பங்கு மீட்பு ஒதுக்கம், சொத்து மறுமதிப்பீட்டு இலாபம்
   5) பொது ஒதுக்கம், பங்குவட்டம், பங்கு கழிவு
6. எல்லைக்கிரயவியலின் வகைப்படுத்தல் எது?
   1) நேர்கிரயம், நேரில் கிரயம்
   2) மூலக்கிரயம், உற்பத்திக்கிரயம்
   3) நிலையான கிரயம், மாறும் கிரயம்
   4) நேர்பொருள் கிரயம், நேர்கூலிக்கிரயம்
   5) மூலப்பொருள்கிரயம், மாற்றல் கிரயம்
7. பங்களிப்பு எனப்படுவது?
   1) விற்பனை வருமானத்திலிருந்து மாறும் கிரயத்தைக்கழிப்பது
   2) விற்பனை வருமானத்திலிருந்து நிலையான கிரயத்தைக் கழிப்பது
   3) விற்பனை வருமானத்திலிருந்து மொத்தக் கிரயத்தை கழிப்பது
   4) விற்பனை வருமானத்திலிருந்து நேர்கிரயத்தைக் கழிப்பது
   5) விற்பனை வருமானத்திலிருந்து நேரில்கிரயத்தைக் கழிப்பது.

8-11 வரையான வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
கம்பனியொன்றின் மூலப்பொருள் தொடர்பாக
வருடாந்த நுகர்வு 100000 அலகுகள்

| | |
|---|---|
| ஒரு கட்டளைக்கான செலவு | ரூ. 5 |
| பராமரிப்புச் செலவு | ரூ. 4 |
| பாவனைக்காலம் | 2 – 4 நாள்கள் |
| பாவனை அலகு | 50-100 அலகுகள் |

8. சிக்கனக் கட்டளைத் தொகையைக் காண்க?
   (1) 400 (2) 300 (3) 1000 (4) 800 (5) 500
9. வருடத்தில் எத்தனைத் தடவைகள் பொருளுக்குக் கட்டளைப்படுத்த வேண்டும்
   (1) 200 தடவை (2) 33 தடவை (3) 100 தடவை
   (4) 125 தடவை (5) 250 தடவை
10. உச்ச மட்டம் யாது?
    (1) 500 (2) 700 (3) 600 (4) 1000 (5) 400
11. இழிவு மட்டம் யாது?
    (1) 100 (2) 400 (3) 75 (4) 750 (5) 500

12-13 வரையான வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
மூலப்பொருள் M-1 தொடர்பாக பின்வரும் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றது.

| | |
|---|---|
| 01/01/06 | ரூ.10 விலையில் 1500 Kg கொள்வனவு |
| 08/01/04 | ரூ.12 விலையில் 2000 Kg கொள்வனவு |
| 15/01/04 | 1600 Kg தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. |
| 20/01/04 | 500 Kg தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டது. |

12. இறுதியாக வந்தது முதல் வெளியே முறையில் 31/01/06 இல் இருப்பு யாது?
    (1) 14400 (2) 15900 (3) 15000 (4) 24000 (5) 14000
13. எளிய சராசரி விலையிடல் முறையில் 16/01/04 இல் இருப்பின் பெறுமானம் யாது?
    (1) 14400 (2) 21400 (3) 14000 (4) 15900 (5) 38500

14,15 இலக்க வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
நிறுவனமொன்றின் முடிவுக்கணக்கிலிருந்து பின்வரும் விடயங்கள் எடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| 01/01/05 இல் இருப்பு | 100,000 |
| 31/12/05 இல் இருப்பு | 50,000 |
| ஆண்டிற்கான விற்பனை | 750,000 |
| மொத்த இலாபம் | 150,000 |

14. மொத்த இலாபவீதம் யாது?
    (1) 500% (2) 30% (3) 20% (4) 40% (5) 10%
15. இருப்புச் சுழற்சி விகிதம்
    (1) 15 தடவை (2) 10 தடவை (3) 7.5 தடவை
    (4) 9 தடவை (5) 8 தடவை

16,17 இலக்க வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
ஓர் உற்பத்தி நிறுவனத்திலிருந்து பின்வரும் விடயங்கள் கொடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| அலகிற்கான விற்பனை விலை | - ரூ. 100 |
| அலகிற்கான மாறும் செலவு | - ரூ. 60 |
| மாதத்திற்கான நிலையான செலவு | - ரூ. 60,000 |
| மாதத்திற்கான செயல்பாட்டு மட்டம் | - 2000 அலகுகள் |

16. மொத்தப் பங்களிப்பின் பெறுமானம் யாது?
    (1) ரூ. 140,000 (2) ரூ. 80,000 (3) ரூ. 200,000
    (4) ரூ. 160,000 (5) ரூ. 100,000
17. 2500 அலகுச் செயல்பாட்டு மட்டத்திலான இலாபம் யாது?
    (1) ரூ. 40,000 (2) ரூ. 30,000 (3) ரூ. 20,000
    (4) ரூ. 300,000 (5) ரூ. 50,000
18. பின்வருவனவற்றில் முதலீட்டு நடவடிக்கையை மட்டும் கொண்ட தொகுதி எது?
    1) முதலீட்டுக் கொள்வனவு, வாகன விற்பனை, பெறுமானத்தேய்வு
    2) பங்கு வழங்கல், பங்குமீட்பு, தொகுதிகடன் வழங்கல்
    3) இயந்திரவிற்பனை, திறைசேரி உண்டியல், கொள்வனவு, முதலீட்டு வட்டி
    4) உபகார வழங்கல், சொத்து மதிப்பீடு, பெறுமானத்தேய்வு
    5) வட்டிக் கொடுப்பனவு, வரிக் கொடுப்பனவு, பங்கிலாபக் கொடுப்பனவு
19. காசுப் பாச்சலாக அமையாத விடயங்கள் எவை?
    1) பெறுமானத் தேய்வு, உபகார வழங்கல்
    2) உபகார வழங்கல், பெறுமானத் தேய்வு
    3) ஐயக்கடன் ஏற்பாடு, சொத்து மறுமதிப்பீடு
    4) உபகார வழங்கல், ஐயக்கடன் ஏற்பாடு
    5) மேற்கூறிய அனைத்தும்

20-22 வரையான வினாக்களுக்குப் பின்வரும் தரவுகளைப் பயன்படுத்துக.
ஓர் அலகு பொருளை உற்பத்தி செய்வதற்கு 5 நிமிடங்களை பயன்படுத்தலாம் மணித்தியாலத்திற்கு ரூ. 60 கூலி வழங்கப்படும் நாளாந்தம் 10 மணித்தியாலங்கள் வேலை செய்து 5 நாட்களில் 720 அலகுகளை ஓர் ஊழியரால் முடிக்கப்பட்டுள்ளது. வெளியீடு செய்யும் ஓர் அலகிற்கு ரூ. 5 கூலி வழங்கப்படலாம். நாளாந்தம் 8 மணித்தியாலங்களிற்கு அதிகம் வேலை செய்தால் 150% கூலி வழங்கப்படும்.

20. நேரத்தை அடிப்படையாகக் கூலி வழங்கப்பட்டால் குறித்த ஊழியரின் அந்த வாரக் கூலி யாது?
    (1) 3000 2) 3300 (3) 4500 (4) 1500 (5) 6000
21. வெளியீட்டை அடிப்படையாகக் கொண்ட கூலி வழங்கப்பட்டால் அந்த வாரக் கூலி யாது?
    (1) 3600 (2) 3300 (3) 4500 (4) 4000 (5) 300
22. கல்சி முறையை அடிப்படையாகக் கொண்டு உபகாரக் கூலி வழங்கப்படுகின்றது என எடுத்துக் கொண்டு உபகாரக் கூலியைக் காண்க?
    (1) 3900 (2) 3600 (3) 300 (4) 3300 (5) 3500
23. கிரயக் கணக்கீட்டின் நோக்கம் பின்வருவனவற்றில் எது பொருத்தப்படாது?
    1) முகாமை கணக்கீட்டிற்கு தகவல்களை வழங்கல்
    2) உற்பத்தி செலவுகளை மதிப்பீடு செய்தல்
    3) உற்பத்தி தொடர்பான பாதீடுகளைத் தயார் செய்தலும் உதவுதலும்
    4) தீர்மானங்களை எடுப்பதற்கான தகவல்களை வழங்குதல்
    5) மேற்கூறிய யாவும்
24. நிறுவனமொன்றின் கடன்தீர்க்கும் அளவுகளை மதிப்பிட பயன்படும் விகிதங்கள்
    1) இருப்புச் சுழற்சி விகிதம், கடன்பட்டோர் சுழற்சி விகிதம்
    2) கடன்பட்டோர் சுழற்சி விகிதம், கடன்கொடுத்தோர் சுழற்சி விகிதம்
    3) நடைமுறை விகிதம், விரைவு விகிதம்
    4) மொத்தச் சொத்துச் சுழற்சி விகிதம், மொத்த இலாப வீதம்
    5) மொத்த இலாப வீதம், தேறிய இலாப வீதம்

25 தொடக்கம் 28 வரையுள்ள வின்ாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை இட்டு நிரப்புக.

25. விற்பனையில் பங்களிப்பின் சதவீதத்தினை மதிப்பிடுவது ……………….ஆகும்.
26. தொகுதிக்கடன்காரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குக் கணிப்பிடப்படுவது ………………. ஆகும்.
27. அட்டுறு கோட்பாடு பின்பற்றப்படாது காசு அடிப்படையில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்று …………………… ஆகும்
28. ஆடை உற்பத்தி நிறுவனத்தில் துணி …………………… ஆகும்.

29 தொடக்கம் 31 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட கூற்றுக்கள் சரி (✓) யானவையா பிழை (X) யானவையா எனத் தருக.

29. மேந்தலை உள்ளடக்க விகிதமானது திட்டமிடப்பட்ட மேந்தலையை உண்மையாக ஏற்பட்ட மேந்தலைகளால் பிரிப்பதன்மூலம் பெறப்படும். ( )
30. மாறும் கிரயம் செயல்பாட்டு மட்டத்துடன் நேர்கணிய தொடர்பு கொண்டு காணப்படுகிறது ( )
31. கொள்வனவு வேண்டுதல் பத்திரம் கொள்வனவுப் பிரிவால் களஞ்சியப்பிரிவிற்கு அனுப்பப்படும். ( )
32. இலங்கைக் கணக்கிடல் நியமம் 18 இன்படி சொத்தொன்றின் சாதாரண பெறுமதி என்பதனை வரையறை செய்க?
33. கிரயம் என்பதனை வரையறை செய்க?
34. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 36 இற்கு அமைய நிகழத்தக்க பொறுப்புக்கள் என்பதனை வரையறை செய்க?
35. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன்படி 'ஆதனம் பொறி உபகரணங்கள்' என்பதனை வரையறை செய்க?
36. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன்படி பிந்திய செலவுகள் என்றால் என்ன என்பதனை வரையறை செய்க?
37. கிரய நிலையம் என்றால் என்ன?
38. முதல்வந்தது முதல் வெளியே முறையில் காணப்படும் இரண்டு நன்மைகளைத் தருக?
39. 'இலாப நட்டமற்ற புள்ளி' என்றால் என்ன?
40. சந்தர்ப்ப கிரயம் என்றால் யாது?

(கணக்கீடு - II இல் பகுதி - II இன் வினாக்கள் 08.05.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

### வணிகக்கல்வி -II

திரு. B.S. பசீல் (B.B.A.) யாழ்.

(பகுதி II இன தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றன.)

4.(i). அ.
1. பொறி விருட்சங்களில் ஏற்படும் கோளாறுகள்.
2. இருப்புப் பற்றாக்குறை
3. மின்சாரம் தடைப்படுதல்
4. போக்குவரத்துத் தடை
5. ஊழியர்களின் வேலை நிறுத்தம் அல்லது தொழிற்சங்கப் போராட்டம்.

ஆ.
1. பொறி விருட்சங்களைப் பராமரித்தல்
2. பாதுகாப்பு இருப்பைப் பேணல்.
3. ஊழியர்களுக்குப் பயிற்சி அளித்தல்
6. ஊழியர்களை ஊக்குவித்து வேலை செய்வித்தல்

(ii).
1. சந்தையில காணக்கூடிய வியாபார சூழ்நிலைகளை இனங்காண உதவும்.
2. நிகழ்கால, எதிர்கால வியாபார வாய்ப்புகளுக்கு ஏற்ப வளங்களை மதிப்பீடு செய்ய உதவும்.
3. சந்தைகள், வளங்கள் என்பவற்றின் அடிப்படையில் மிகப்பொருத்தமான வியாபாரச் சூழ்நிலையை நிர்ணயம் செய்தல்.
4. ஒரு நிறுவனம் சந்தையில் நிலைப்பதற்கு நுகர்வோர் பற்றிய தகவல்கள் அவசியம். அதைப் பெற இந்த ஆராய்ச்சி உதவும்.
5. சந்தைப்படுத்தல் எண்ணக்கருக்களினுள் எந்த எண்ணக்கருவைப் பயன்படுத்துவது எனத் தீர்மானிக்க உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii).அ. தொழிலாளர்களுக்கும் தொழில்கொள்வோர்களுக்கும் இடையில் தொழில் ரீதியாக நிலவுகின்ற கருத்து வேறுபாடு கைத்தொழில் பிணக்கு ஆகும்.

ஆ.

1. சம்பள முரண்பாடுகள்
2. இறுக்கமான வேலை ஒப்பந்தம்
3. ஊழியர் நலன் தொடர்பான வசதிகள் பேணப்படாமை
4. ஊழியர் அனுபவித்த சலுகைகளை நிறுத்துதல்.
5. நியாயமற்ற பதவி நீக்கங்கள்
6. நியாயமற்ற பதவி உயர்வு
7. வேலை ஒதுக்குவது தொடர்பான விடயம்
8. புதிய தொழில்நுட்பம்
9. பாதுகாப்பற்ற தொழிற்சூழல்

(iv). அ.

*ABC பகுப்பாய்வு* - இது இருப்புக் கட்டுப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் ஒரு முறை ஆகும். இதன்படி நிறுவனம் அதன் இருப்புகளை பணப்பெறுமதி, எண்ணிக்கை என்பவற்றின் அடிப்படையில் A, B, C என வகைப்படுத்தி அவற்றுக்குப் பொருத்தமான கட்டுப்பாட்டைப் பேணுதல் A, B, C பகுப்பாய்வு ஆகும்.

ஆ. வாடிக்கையாளர் எண்ணக்கரு – நிறுவனம் தனிப்பட்ட வாடிக்கையாளர்கள் ஒவ்வொருவரையும் கவனத்தில் எடுத்து அவர்களுக்கேற்ற விதத்தில் பொருள்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் போது அது வெற்றிகரமான சந்தைப்படுத்தலாக அமையும் என விளக்குவது வாடிக்கையாளர் எண்ணக்கருவாகும்.

இ. வியாபாரக்குறி - குறிப்பிட்ட உற்பத்திப் பொருளை இனங்காணப் பயன்படுத்தப்படும், பதிவு செய்யப்பட்ட குறியீடு அல்லது சின்னம் வியாபாரக்குறி ஆகும்.

5.

(i). குறித்த கால எல்லைக்குள் குறிப்பிட்ட நோக்கத்தை அடைவதற்காக வளங்களை ஈடுபடுத்துதல் தொடர்பான நிதியும், கிரயமும் சார்ந்த கூற்று அல்லது வருமானங்கள், செலவுகள் தொடர்பான எதிர்வு கூறல் அல்லது நிதித்திட்டப் பாதீடு ஆகும்.

இதன் முக்கியத்துவங்கள்

1. நிறுவனத்தின் நோக்கத்தை அடைய உதவும்.
2. வேறுபட்ட செய்முறைகளை மதிப்பிட உதவும்.
3. செயற்பாடுகளைப் பரிசோதிக்க உதவும்.

(ii).

1. தேவையான நிதியைத் திட்டமிடல்.
2. நிதியை பொருத்தமான மூலத்தில் தெரிவு செய்தல்.
3. நிதியை பொருத்தமான திட்டங்களில் முதலீடு செய்தல்.
4. நிதிசார் அறிக்கைகளைத் தயாரித்தல்.
5. பாதீட்டைத் தயாரித்தல்.

(iii). அ.

1. அரச சட்டத்தில் கூறப்படும் இழிவுச் சம்பளம்.2. வாழ்க்கைச் செலவு
3. போட்டிநிறுவனம் வழங்கும் சம்பள அளவு 4. தூண்டல் கொடுப்பனவுகள்
5. ஊழியரின் சிறப்பு நிபுணத்துவம் 6. ஊழியக் கேள்வியும் நிரம்பலும்
7. தொழிலின் தன்மை

ஆ.

1. இலங்கையர்களுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
2. வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் நலனைப் பாதுகாத்தல்.
3. தொழில் முகவர் நிலையங்களைப் பதிவு செய்தல்.
4. பதிவு செய்யப்படாத தொழில் முகவர் நிலையங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

(iv).அ. விற்பனையில் தேறிய இலாப வீதம் - 24%

தொழிற்படுத்தப்பட்ட மூலதனத்தின் மூலதன வருவாய் வீதம். – 20%

ஆ. சாதாரண பங்குமுதலும் ஒதுக்கங்களும்

6.

(i). பொருளகளைப் பற்றித் தகவலளிப்பதும் விற்பனைக்கு உதவுவதும் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையிலும் பொருள்களை பெட்டியிலிடுதல் அல்லது உறையிலிடுதல் அல்லது கொள்கலனில் இடுதல் பொதியிடுதல் ஆகும்.

இதன் பயன்கள்

1. பொருளைப் பற்றித் தகவலளிக்கும் 2. பொருளை விற்க உதவும்
3. பொருளுக்குப் பாதுகாப்பை ஏற்படுத்தும். 4. பொருளை எடுத்துச் செல்ல உதவும்
5. பொருளுக்குக் கவரச்சியாக அமையும்.

(ii). அ.

1. சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.
2. சந்தை ஆய்வு செய்தல்
3. உற்பத்தி செய்தல்
4. கொள்வனவு செய்தல்
5. விலையிடுதல்
6. பொதியிடுதல்
7. மேம்படுத்தல்களைச் செய்தல்
8. விற்றல்.

ஆ.

1.கல்வியறிவு –பொருள், வாடிக்கையாளர், சந்தை, நவீன தொழில்நுட்பம் என்பவை தொடர்பாக சிறப்பறிவு காணப்படல்

2.பயிற்சியும் அனுபவமும். – தொழிலுக்கான பயிற்சியும் விற்பனைக் கரும அனுபவமும் இருத்தல்.

3.சிறப்பறிவு. – தமது விற்பனைப் பொருள், மாற்றுவகைப் பொருள், வாடிக்கையாளர் நடத்தை என்பவை தொடர்பாகச் சிறப்பறிவு இருத்தல்.

4.சமூகமயமாக்கல் - நிறுவன ஊழியர்களுடனும் வெளிக்கட்சியினருடனும் வாடிக்கையாளர்களுடனும் பண்பாகத் தொடர்பு கொள்ளும், பழகும் ஆற்றல்.

(iii). நிறுவனம் அடைய வேண்டிய நோக்கத்தை நிச்சயிப்பதும் அதை அடைவதற்கான செயற்பாடுகளை நிச்சயிப்பதும் திட்டமிடுதலாகும்.

நிறுவனப் பெறுபேறுகள் நியமத்துக்கு அமைவாக உள்ளனவா என்பதனைப் பரிசீலித்து உறுதிப்படுத்துவதும் அவ்வாறான வேளையில் குறைபாடுகள் (தவறுகள் அல்லது விலகல்) காணப்பட்டால் அவற்றைச் சீராக்குவதும் கட்டுப்படுத்தல் ஆகும். இங்கு கட்டுப்படுத்தலைச் சிறப்பாக மேற்கொள்ள சிறந்த திட்டமிடுதல் அவசியம். நிறுவனத்தின் நோக்கத்தை அடைவதில் இவை இரண்டும் தொடர்புபடுகின்றன.

(iv). நிறுவனத்தை ஆரம்பிக்க அல்லது தற்போது செயற்படக்கூடிய நிறுவனத்தை விரிவாக்கம் செய்யும்போது அதன் எதிர்கால வெற்றி தோல்வியை அல்லது அதன் சக்தியை அறிந்து கொள்ளுவதற்குச் சந்தை முகாமைத்துவத்தையும் நிதிசார் தகவல்களையும் பகுப்பாய்வு செய்வதற்காகத் தயாரிக்கும் அறிக்கை கருத்துத் திட்டமாகும்.

நன்மைகள்

1. செயற்பாட்டுக்கான திட்டமாக அமையும்.
2. செயற்திட்டத்தின் அடிப்படையில் வேலையை தொடரக்கூடியதாக இருத்தல்.
3. இதனைச் சமர்ப்பித்து நிதிநிறுவனங்களில் இருந்து கடன் வசதியை பெறலாம்
4. திட்டம் வெற்றி தருமா இல்லையா என்பதைக் கண்டுகொள்ளலாம்.
5. நிறுவனம் சிறப்பாகச் செயற்படுவதற்கான தகவல்களைப் பெறலாம்.

(முற்றும்)

## விடைக் குறிப்புகள்

வெளியீடு 01

# கணக்கீடு -II

திரு. D.SAM - யாழ்ப்பாணம்.

(கணக்கீடு - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி இங்கு பிரசுரமாகின்றது)

வினா இல: 3

(அ) (1)

அமலதாஸ் கம்பனியின்
31.12.2004 இல் முடிவடைந்த ஆண்டிற்கான
காசுப்பாய்ச்சற் கூற்று

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| தொழிற்படும் செயற்பாடு : | | |
| வரிக்கு முன் இலாபம் | 131 600 | |
| சீராக்கம் : | | |
| வட்டி | 8 400 | |
| பெறுமானத் தேய்வு | 60 000 | |
| தொழிற்படு மூலதன அசைவுக்குமுன் செயற்பாட்டு இலாபம் | 200 000 | |
| தொழிற்படு மூலதன அசைவு : | | |
| கைமிருப்பு | (200 000) | |
| கடன்பட்டோர் | (120 000) | |
| முதலீடு | (48 000) | |
| கடன்கொடுத்தோர் | 100 000 | |
| செயற்பாட்டாட்டால் உருவான காசு | (68 000) | |
| வட்டி | (8 400) | |
| வரி | (59 600) | |
| தொழிற்படும் செயற்பாட்டுத் தேறிய காசு | | (136 000) |
| முதலீட்டுச் செயற்பாடு : | | |
| பொறி உபகரணம் கொள்வனவு | (140 000) | |
| முதலீட்டுச் செயற்பாட்டுத் தேறிய காசு | | (140 000) |
| நிதியிடல் செயற்பாடு : | | |
| சாதாரண பங்கு வழங்கல் | 100 000 | |
| முன்னுரிமைப் பங்கு வழங்கல் | 40 000 | |
| வங்கிக்கடன் பெறல் | 176 000 | |
| நிதியிடல் செயற்பாட்டுத் தேறிய காசு | | 316 000 |
| இறுதிக் காசு | | 40 000 |

(2)

(i)வட்டிக் காப்பு விகிதம் = வரி வட்டி கழிக்க முன்னுள்ள இலாபம் / வட்டி
வட்டிக் காப்பு விகிதம் = 140 000 / 8 400 = 16.66 தடவைகள்

(ii) நடப்பு விகிதம் = நடைமுறைச் சொத்து / நடைமுறைப் பொறுப்பு
நடப்பு விகிதம் = 408 000 / 100 00 = 4.08/1

(iii) விரைவு விகிதம் = விரைவுச் சொத்து / நடைமுறைப் பொறுப்பு
விரைவு விகிதம் = 2408 000 / 100 00 = 2.08/1

(iv) பங்கொன்றிற்கான உழைப்பு = வரி முன்னுரிமைப் பங்கிலாபம் கழித்த இலாபம் / சாதாரண பங்குகளின் எண்ணிக்கை.
பங்கொன்றிற்கான உழைப்பு = 70 000 / 10 00- = 7 தடவைகள்

(v) கடன்பட்டோர் வசூல் காலம் = $\frac{\text{சராசரிக் கடன்பட்டோர்}}{\text{கடன் விற்பனை}} \times 12$

கடன்பட்டோர் வசூல் காலம் = $\frac{120\ 000}{480\ 000} \times 12 = 3$ மாதங்கள்

(vi) கடன்கொடுத்தோர் தீர்வுக் காலம் = $\frac{\text{சராசரிக் கடன்கொடுத்தோர்}}{\text{கடன் கொள்வனவு}} \times 12$

கடன்கொடுத்தோர் தீர்வுக் காலம் = $\frac{100\ 000}{400\ 000} \times 12 = 3$ மாதங்கள்

(ஆ)

- ஆதனம் பொறித் தொகுதி உபகரணத்திலிருந்து ரூபா 16 000 000 வெளியேற்றல்.
- ஏற்பாட்டிலிருந்து ரூபா 640 000 வெளியேற்றல்.
- நிகழாண்டுத் தேய்வு ரூபா 320 000 பதிவிடப்படல்.
- நட்டம் ரூபா 320 000 இலாப நட்டக் கணக்கிற்கு வரவில் மாற்றப்படல்.

வினா இல : 4

(அ) (i)

- களஞ்சியத்தைச் சீராகப் பராமரித்தல்.
- பொருள்களைப் பெறுதலும், பரிசீலித்தலும்.
- பொருள்களைத் தேவைக்கேற்ப விநியோகித்தல்.

(ii)
- முகாமைக் கணக்கீட்டின் விடையப்பரப்பு ஆழமானது. கிரயக் கணக்கீட்டின் விடயப்பரப்பு குறுகியது.
- முகாமைக் கணக்கீடு நிதி, முகாமை போன்றவற்றுடன் தொடர்புடையது. கிரயக் கணக்கீடு உற்பத்தியுடன் தொடர்புடையது.

(iii) பொருள்கள் வைத்திருக்கும் இடத்தில் அப்பொருள்களின் விபரங்களை உள்ளடக்கியதாகப் பராமரிக்கப்படும் ஓர் அட்டை.

(iv) உற்திப்பொருள் தேவைப்படுமிடத்து உற்பத்தி செய்தலும், அதன்போது மூலப் பொருளைக் கொள்வனவு செய்வதுமான இருப்பு கட்டுப்பாட்டு முறை.

(v)
- வரவுப் பதிவு இடாப்பு
- அட்டை

(vi)
- நாளாந்த நேர அட்டை
- வாராந்த நேர அட்டை
- வேலைக் கிரய அட்டை

(கணக்கீடு - II இன் விடைக்குறிப்புகளின் தொடர்ச்சி 08.05.2006ஆம் திகதிய கல்விச்சுடரில் வெளிவரும்.)

கல்விச்சுடரில் வெளிவரும் வினாக்களிலும், விடைகளிலும் ஏதாவது தவறுகள் அல்லது சந்தேகங்கள், விளக்கமின்மைகள் ஏற்படின் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டால் அல்லது விலாசத்திற்கு எழுதி அனுப்பினால் உரிய ஆசிரியர்களுடன் தொடர்பு கொண்டு உங்களது சந்தேகங்கள் தெளிவாக்கப்படும்.

தொ.பே. இல. 0714-273035, 0714-220008

கல்விச்சுடர்
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org